
ஞாயிறு வெளியீடு. விலை 0—1—3. REGD. NO. M. 4642



# திராவிடநாடு

மலர் 3.] 10—12—44 [இதழ் 38.

★

## வருவீர்!

பண்:-காகாப்பிரியா. அடை:-ஆதி.
"இதுநல்ல சமயம் ஐயா"
என்ற மெட்டு.

பல்லவி.

பிரிவினை, பெற வருவீர்!
பெரியார் சொல்லும் இனப் (பிரி)

அநுபல்லவி.

சரிநிகர் ஆகவே நாமினி வாழ்ந்திடத்
தடைசெயும் ஆர்யத்தைப் பொடிபடத்
தான் செய்வோம் (பிரி)

சரணம்.

திராவிடர் சீரிய கலைகளில் தேறவும்
சிறுமையைத் தான்தரும் நெறிகளைத்
தீரவும்
திறமும் தன்மானமும்சிந்தையில் சேரவும்
தீயவைமாறவும் செல்வமிங்(கு)
ஆரவும் (பிரிவினை)

★

கரந்தை, வேங்கடன்



# பெரியபுராண ஆராய்ச்சி

ஈழத்தடிகள். பி. எ.

## முன்னுரை.

பெரிய புராணத்திற் காணப்படும் நாயன்மார்கள் அறுபத்து மூவரில், பத்தொன்பது பேர்களுடைய ஆராய்ச்சி, நான்கு பாகங்களாக நூல் வடிவில் இதற்கு முன்னர் எம்மால் வெளியிடப்பட்டு விட்டன. எஞ்சியுள்ள நாற்பத்து நான்கு நாயன்மார்களைப் பற்றிய ஆராய்ச்சிகளையும் சிறு சிறு பகுதிகளாக நூல் வடிவிலேயே கொண்டுவருதல் வேண்டுமென்ற எண்ணத்திற்கு இடையூறாகக் காகிதப் பஞ்சம் என்னும் பகைவன் குறுக்கே வந்து நின்று என் எண்ணத்திற்குச் சோர்வும், என் முயற்சிக்குத் தளர்ச்சியுந் தந்து, யான் எடுத்துக் கொண்ட அரும் பணிக்குப் பெருங்கேடு சூழ்வானாயினன்.

இப்பகைமை எப்போதொழியுமென்ற ஏக்கமும், பெரிய புராண ஆராய்ச்சி நான்கு பாகங்களையும் படித்த தோழர்கள், எஞ்சியுள்ள நாயன்மார்களின் வரலாறுகளையும் ஆராய்ச்சி வாயிலாக விரைவில் வெளியிடுக என்று எம்மைவற்புறுத்திய ஆர்வத்தையூட்டும் அன்புத்தொல்லையும், ஒன்று சேர்ந்து எடுத்துக்கொண்ட இப்பணியை எப்படியாவது முடித்துவிடவேண்டுமென்ற எமது எண்ணத்தைத் "திராவிட நாடு" தனது சுருங்கிய இடத்தில் ஒரு சிறு பகுதியையாவது இதற்குத் தந்துதவும் உரிமையை வழங்கியதால், பெரிய புராண ஆராய்ச்சியின் ஐந்தாம் பாகம் சிறு சிறு பகுதியாக இவ் விதழ் வாயிலாக வெளியிடப்படுகின்றது.

## பெரிய புராண ஆராய்ச்சி, 5-ம் பாகம்
## சம்பந்தர் வரலாறு.


சம்பந்தர் என்பவர் சீர்காழி என்னும் ஊரில் இருந்த சிவபாதவிருதயர் என்ற ஒரு சைவப் பார்ப்பனரின் புதல்வர். சிவபாதவிருதயர் காலத்தில், தமிழ் நாட்டில், புத்தம் சமணம் ஆகிய இரு சமயங்களுமே ஆக்கம் பெற்றிருந்தன. சைவ சமயமும், அதன் கொள்கைகளும் மிகவும் அருகியோ அல்லது இருந்தும் இல்லாமலுமோ ஊசலாடிக்கொண்டிருந்தன. இளமையிலேயே முதுமையடைந்து தள்ளாடித் தடுமாறிக்கொண்டிருந்த இச்சைவத்தை இளமையாக்கி வளர்க்க விரும்பிய சிவபாதவிருதயருக்குஇதற்குத், தடையாகவுள்ள சமணம் புத்தம் ஆகிய சமயங்களை ஒழிக்க வல்லஒருபுதல்வனைப் பெறுதல் வேண்டுமென்ற எண்ணம் வளர்ச்சியடைந்து கொண்டுவந்தநிலையில், சிவபாதவிருதயரின் மனைவி கருவுற்று ஒரு ஆண் மகவைப் பெற்றெடுத்தாள், இக் குழந்தையின் மூன்றாவதாண்டில் இதற்குச் சம்பந்தர் அல்லது திருஞான சம்பந்த நாயனார் என்ற பெயர் சூட்டப்பட்டது. இப்பெயர் பற்றிய ஆராய்ச்சியைப் பின்னர் ஆராய்வோம். முதற்கண்; சைவத்தையும், இதனை விளக்க எழுந்த தேவாரத்தையும், இவற்றிற்கு இடையூறாக நின்ற புத்த, சமண சமயங்களைப் பற்றியும் ஒரு சிறிது ஆராய்ந்து மேற் செல்வாம்.

சம்பந்தர் காலம், இற்றைக்கு 1330 ஆண்டுகட்கு முற்பட்டதென்பது வரலாற்றுண்மைகளால் பெறப்படுவதால், சம்பந்தருக்கு முற்பட்ட காலம், சைவசமயம் ஆக்கம் பெற்றிருந்த காலமென்று கருத முடியாது. புத்தம் சமணம் ஆகிய இருமதங்களுமே சம்பந்தர் காலத்திற்கு முன் ஆக்கம் பெற்றிருந்தன வென்று பெரிய புராணமே ஒப்புக்கொள்வதால், இப்போதைய சைவ அன்பர்கள் கூறுவது போன்ற அத்துணைப் பழைமை வாய்ந்ததென்று சைவசமயத்தைக் கூறிவிட முடியாது. ஒருக்கால், புத்தம் சமணம் ஆகிய, மக்களின் வாழ்க்கைக்கு நன்னெறி கற்பிக்கும் சமயங்கள் தோன்றுவதற்கு முன்பிருந்தே சைவம் என்பதாக ஒரு சமயம் இத் தமிழ் நாட்டில் இருந்ததென்று கூறுவார் உரையை ஒப்புக்கொண்டு பார்த்தாலும், அது, அக்காலத் தமிழ் மக்களின் ஆதரவைப்பெற்ற செல்வாக்கு வாய்ந்த சமயமாய் இருந்திருக்க முடியாது. ஏனென்றால், ஒரு நாட்டுமக்களின் ஆதரவையும் செல்வாக்கையும் பெற்ற எந்த மதமும், அது தோன்றிய காலத்திலிருந்தே அதன் பெருமைகளையும் கொள்கைகளையும் நூல் வடிவில் கொண்டுவருவது கண்கூடு. கிறித்துவ சமய உண்மையை விளக்க ஒரு விவிலிய நூலும், முசிலீம் சமய உண்மையை விளக்க ஒரு கொரானும் இருப்பதுபோலச், சைவசமய உண்மைகளை விளக்கும் ஒரு நூலாவது தமிழ் மொழியில் கிடையாது. சைவ சமயத் தொடர்பான உண்மைகளை விளக்கும் தமிழ் நூல்களிற் பழைமையானவையும் முதன்மையானவையும் தேவார திருவாசகங்கள் தாம். இத் தேவார திருவாசகங்களும் உண்மையாகவே சைவ சமய உண்மைகளை விளக்க வந்த நூல்களுமல்ல. இவை, சிவனைக் கடவுளாக்கிச் சைவத்தை வளர்க்க வந்த சமயாசிரியர்கள், புத்தர்—சமணர் முதலான நன்மக்களைத் திட்டியும் நான்முகன் திருமால் முதலானவர்கட்குக் கடவுட்டன்மை இல்லையென்றும், தமிழ் மன்னனான இராவணனை இகழ்ந்தும், பார்ப்பனருக்கு உயர்வு கற்பித்தும் பாடிய பாடல்கள் தாம் தேவார திருவாசகங்கள் என்ற பெயரில் வைத்து வழங்கப்படுபவை. சைவ சமய மல்லாத பிற சமயங்களை இகழ்வதும், சைவ சமயத்தைத் தழுவாத மக்களை மனம்போனவாறெல்லாம் குண்டர்கள்—சழக்கர்கள்—தடியர்கள் என்று வைவதும், சிலரால் கடவுள் நிலையில் வைத்து வணங்கப்படும் திருமால் முதலானவர்களை இழிவாகப் பேசுவதும், தமிழ் மன்னான இராவணனை அரக்கன் பாவி என்று நாத்தழும்பேறத் திட்டுவதும் இன்னபிற இழிதகைமைகளையெல்லாம் தம்மகத்தே கொண்டுள்ளஇத் தேவார திருவாசகங்களை, ஒரு சமய உண்மையை விளக்க எழுந்த நூல்கள் என்று அறிவுடைய எவராவது ஒப்புக்கொள்வரா என்பதனை எண்ணிப்பாருங்கள், அன்பர்களே.

அன்றியும், இத்தேவார திருவாசகங்கள், இராமாயண பாரதக் கதைகளையும், பதினெண் புராணக்கதைகளையும் பாட்டு வடிவில் விளக்கிக் காட்டும் பலகதைப்பாடல் திரட்டென்பதும், அவற்றின் பொருளறிந்து படிக்கும் எவரும் தெள்ளிதினுணர்வர். இச்சொல்லப்பட்ட இராமாயண பாரதக் கதைகளும், பதினெண் புராணக் கதைகளும் தமிழுக்கும் தமிழர்க்கும் புறம்பான வடமொழி-ஆரியக்கதைகள் என்பதைச் சைவர்களே ஒப்புக் கொண்டுள்ளனர். எனவே, இக்க்தைகளுக்குத் தமிழ் எழுத்துக்களால் வடிவம் கற்பித்துச்சைவமுலாம்பூசித்தேவார திருவாசகங்கள் என்ற பெயர்களோடு படம்பிடித்துக் காட்டிய போதிலும், அவற்றைச் சைவசமய உண்மைகளை விளக்கும் நூல்கள் என்றோ, அல்லது தமிழ்மக்கட்குரிய மறைகள் என்றோ எந்தத் தமிழனும் ஒப்புக்கொள்ளமாட்டான்.

இனி, உண்மையாகவே இத்தேவார திருவாசகங்கள் தாம் சைவ சமய உண்மைகளை விளக்க எழுந்த நூல்கள் என்றால், சைவத்தைத் தங்கள் சமயமாகக் கொண்டுள்ள அனைவராலும் இவை ஒப்புக்கொள்ளப்பட்டுக் கையாளப்படுதல் வேண்டும். ஒரு கொரானே உலகிலுள்ள முசல்மான்கள் அனைவருக்கும் அவர்களின் சமய உண்மையை விளக்குவது போலவும், ஒரு விவிலிய நூலே உலகிலுள்ள கிறித்தவர் அனைவருக்கும் அவர்களின் சமய உண்மைகளை விளக்குவது போலவும். இத்தேவார திருவாசகங்களே உலகிலுள்ள சைவர்கள் அனைவருக்கும் அவர்களின் சமயஉண்மைகளை விளக்கும் நூல்களாக மிளிர்தல் வேண்டும். ஆனால், வடநாட்டிலுள்ள சைவர்களோ, தெலுங்கு நாட்டிலுள்ள சைவர்களோ, கன்னடச்சைவர்களோ, மலையாள நாட்டிலுள்ள சைவர்களோ இத்தேவார திருவாசகங்களைத் தங்கள் சமய நூல்களாகக் கொள்வதில்லை. அவர்களுக்குஇத்தகைய நூல்கள் சைவசமய உண்மையை விளக்

(12ம் பக்கம் பார்க்க)



# கேட்டீரா, விஷயத்தை!

30—11—44ல் சர். ஆர். கே. சண்முகம் அவர்கள் தஞ்சை நகராண்மைக் கழகத்தில் பேசுகையில், அநேக இடங்களிலுள்ள நகராண்மைக் கழகங்கள் கட்சிப்போட்டியினாலும் அரசியல் கருத்து வேறு பாட்டினாலும் பாழாகின்றனவென்றும், ஷை கழகங்களில்கட்சிப் பிளவுகளோ அரசியல் பிரிவுகளோ இருக்கக்கூடாதென்றும், அவைகளை அறவே தவிர்க்க வேண்டுமென்றும் பேசினார். இதே கருத்தைப் பெரியார் அவர்கள் பன்முறை எடுத்துக்காட்டியிருப்பது எவரும் நன்கறிந்ததே.

ஆனால், ஜஸ்டிஸ் கட்சிக்குப் பெரியார் அவர்கள் தலைவராயிருக்கக் கூடாதென்றும், சர். ஆர். கே. சண்முகம் அவர்களைத் தலைவராகக் கொண்டுவரவேண்டுமென்றும் பெரிதும் முயற்சித்துத் தோற்ற திரு. பி. பாலசுப்ரமண்யம் அண்மையில் திருச்சி நகராண்மைக் கழகத்தில் பேசும்போது எல்லாவித சுயநிர்வாகக் கழகங்களிலும் அரசியல் கிளர்ச்சியும்கட்சி உணர்ச்சியும் அவசியம் இருக்கவேண்டுமென்று பேசியிருப்பதை யாரும் மறக்க முடியாது. ஒருவரைத்தலைவராக்க வேண்டுமென்று கருதுகிறவர் கருத்தும் அதே தலைவருடைய கருத்தும் பெரிதும் மாறுபட்டிருக்கிறதனால் உண்மையில் அவர்களால் நடத்தப்படும் ஒரு இயக்கம் உருப்பெறுமா, நலந்தருமாவென ஐயப்படுவதில் ஆச்சரியமில்லை.

எனவே, இருசாரார்களும் ஏகோபித்துக்கலந்து, ஒரு ஒழுங்கான முடிவுக்கு வந்து, பிறகு அவரவர்களுடையகடமையைச்செய்வதே நேர்மை, நீதியெனநாம் எடுத்துக்காட்டுகிறோம்.

* * *

பலகாலமாக நடந்துவருவதும், பலராலும் ஆதரிக்கப்படுவதும், பொறுப்பு வாய்ந்தவர்களால் நடத்தப்படுவதும், படித்த அறிஞரால் எழுதிவெளியிடப்படுவதுமான மதராஸ் மெயில் பத்திரிகை 3—12—44ல் ஞாயிறு வெளியீடு, 4-ம் பக்கம் 4ம்கலத்தில் குடந்தையில் பெரியாரவர்கள் பேசியதைத் தலைப்புக்கும் உள் செய்திக்கும் தகுதியின்றி முன்னுக்குப்பின்முரணாக வெளியிட்டிருப்பதைப்பற்றி நாம் வருந்துவதோடு பெரியார் அவர்கள் சாதிப்பட்டத்தையொழித்துப் பலவருடங்களாகியும், பன்முறை சாதிபேதத்தைக் காட்டும்எவ்வித குறிகளோ, பட்டங்களோ இருக்கக்கூடாதென்று எடுத்துக்காட்டியிருப்பதை நன்கறிந்தும், பெரியார் அவர்களுக்கு நாய்க்கர் எனும்பட்டத்தை இன்னமும் உபயோகப்படுத்தும் மெயில் பத்திரிகையின் போக்கை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இனியாகிலும் தலைப்புக்குமுரணான செய்தியையும்தவறான கருத்துக்களையும்வெளியிடாதுநேர்மையாகவும்நாணயமாகவும் நடந்துகொள்ள வேண்டுமென்றும் விரும்புகிறோம்,

* * *

வங்காள கவர்னர் கேஸி அவர்கள் கல்கத்தா விற்கடுத்த மூன்று சேரிகளில் 1 மைல் தூரம் நடந்தும், சிலகுடிசைகளுள் நுழைந்தும் பார்வையிட்டதில், சேரியிலுள்ளவர்கள்மிகவும் அசுத்தமான இடங்களில் வசிப்பதாயும், மிக அநாகரிகமாயிருப்பதாயும் அந்நிலையை அவசியம் போக்கவேண்டுமென்றும் பேசினார்.

சேரிகள் கல்கத்தாவிற்கடுத்து மாத்திரமல்ல. இந்தியாவிலுள்ள எல்லாப்பட்டினங்கள் முதல் பட்டிக்காடுகள் வரை ஒவ்வொரு சேரி ஒதுக்கப்பட்டுத்தானிருக்கிறது, அங்குவாழும் மக்கள் தாழ்த்தப்பட்டவர்களாய், அடக்கப் பட்டவர்களாய், ஒடுக்கப்பட்டவர்களாய், என் நடைப்பிணங்களாய்த்தான்வாழ்ந்து வருகிறார்கள். அதற்குக் காரணம் இந்துமதம் என்பதைத் தவிர வேறல்ல. இந்துமதத்தின் காரணமாய்க் கோடிக்கணக்கான பணம் மடாதிபதிகள் மகந்துகள், ஜீயர்கள், சங்கராச்சாரிகள் கையில் சிக்கிக்கொண்டிருப்பதும், அவர்கள் சுகபோக வாழ்வு நடாத்துவதும், அவர்களுக்குப் பாதுகாப்பாக "மதநடுநிலைமை" என்ற போர்வையில் மறைந்துகொண்டு, மக்களைப்பிரித்து ஆண்டுவரும் மதப்பித்துக் கொண்ட, முறையும், வர்ணாச்சிரமக் கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டுள்ள காங்கிரசும் அதன்கர்த்தாவான காந்தியாரும் அவர்களை ஆதரிக்கவும் அவர்களுக்கே "ஜே"போடவும்போட்டும் வருகிற சிலர் இருக்கும்வரை அவர்கள் தீண்டப்படாதவர்களாய்ச் சண்டாளர்களாய்த் தானிருக்கமுடியும்.

மேல்நாட்டுக்கிறித்தவமதத்தில் புகுந்தாலும்கூட அங்கும் உயர்வு தாழ்வு வேற்றுமை விட்டபாடில்லை. இந்துமதத்தின் சாதிபேதத்தையே காரணமாகக்கொண்டு இது ஆதித்திராவிடர் ஆலயம், இது வெள்ளையர் ஆலயமென பிரிக்கப்பட்டும் இவன் ஆதித்திராவிடக்கிறித்தவன் அவன் வேறு கிறித்தவன் என்ற இழிவாகவே கருதப்பட்டும், நடத்தப்பட்டும் வருகிறார்களென்பதைக் கவர்னர் பிரபு அவர்கள் அறியாதிருக்க முடியாது.

எனவே, நம் நாட்டுமக்கள் என்று சாதி மதபேதமற்ற அறிவியக்கத்துள் வீடுபட்டு நாடும், நகரமும்,கிராமமும்சேரியும் ஒன்றுபட்டு சமரசமாய் வாழ்கிறார்களோ அன்றுதான் தீண்டப்படாதவர்களுக்கு விமோசனம், விடுதலை.

* * *

காந்தியார் சென்ற திங்கட்கிழமையிலிருந்து இம்மாதக் கடைசிவரை எவ்வித பொதுவிவகாரங்களிலும், தனிப்பட்ட அலுவல்களிலும், கடிதப்போக்குவரத்துகளிலும், மற்றஎத்தகைய நடவடிக்கைகளிலும் கலந்துகொள்வதில்லையென்றும், எல்லாவற்றையும்விட்டுவிட்டு நிம்மதியான ஓய்வுபெறப் போவதாகவும் கூறி ஒரு புதியவிரதத்தைக்கைக்கொண்டிருக்கிறார்.

இதுவரை அவர் காங்கிரசைத்தன் கைப்பாவையாக ஆட்டிவைத்துநடத்திய சத்தியாக்கிரகங்கள் எத்தனை, மறியல்கள் எத்தனை, இயக்கங்கள் எத்தனை, அவைகளால் சிறைப்பட்ட, தடியடிபட்டத் தொண்டர்கள் எத்தனைபேர், கடைப்பிடித்த நோன்புகள் எவ்வளவு, கைக்கொண்டவிரதங்கள் எவ்வளவு? பலனோ பூஜ்யம்.

உப்புச்சத்யாக்ரகத்தால் உப்புவிலை குறைந்துவிடவில்லை. சட்டமறுப்பியக்கத்தால் சட்டம்எடுபடவில்லை. அன்னிய நாட்டுச் சாமான்களைப்பகிஷ்கரித்ததால் விதேசப்பொருள்கள் இறக்குமதி நின்றுவிடவில்லை. விலையாகாமற் போகவுமில்லை. கள்ளுக்கடை மறியலால் கள்ளிறக்குமதி நின்று விட்டதா? குடிப்பவர்களில்லையா? சவுளிக்கடை மறியலால் விதேசச்சவுளிகள் விலையாகாமற் போய்விட்டனவா? எல்லோரும் கதரையே கட்டுகிறார்களா? இல்லை. எல்லாம் வீண்,

(10ம் பக்கம் பார்க்க)

# கிராம சேவை

பரதன்

“வானத்தை அண்ணாந்து பார்த்தபடியே, நம் நாட்டு வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படுகிறது” என நம் நாட்டு நிலையைப்பற்றி அறிஞர்கள் கூறுவர். பெரிதும் விவசாயத்தையே உறு துணையாகக்கொண்டு வாழும் நாடு இது. 100-க்கு 80-க்கு மேற்பட்டவர்கள் கலப்பையையே கருவூலமாக நம்பி வாழுகின்றனர்.

கவிகள் வேண்டுமானால் மேழிச் செல்வத்தைப் பற்றியும், ஏரடிக்கும் சிறுகோலைப் பற்றியும், வெண்பாக்கள் அமைத்துப் பாடலாம். வேளாண்மையின் சீரையும் சிறப்பையும் பற்றிப்பேசி மகிழலாம். ஆனால் விவசாயம் ஒன்றையே நம்பி வாழும் எந்த நாடும், நாகரீக உலகில் நல்லதொரு இடம்பெற்று இனி வாழ முடியாது என்பதை உலக வளர்ச்சிச் சரிதம் விளக்கிக் கூறுகிறது.

விவசாயம் மட்டுமே நடத்தி, உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து குவித்து, தொழிலுக்கு உதவும் வேறு உற்பத்திப் பொருள்களை உண்டாக்கி அவைகளை வெளிநாட்டுக்குஅனுப்பிவிட்டு, வாழ்ந்து வந்ததே, பொருளாதாரத் துறையில் நம் நாடு நசித்து வருவதற்கு முக்கியமான காரணம். மேனாடுகளில் உள்ளதைப் போலவே, தொழில் வளர்ச்சியும். விவசாயத்தோடு இணைந்து இருந்தால் மட்டுமே, நாட்டுச் செல்வ நிலையைப் பண்படுத்திப் பெருக்க முடியும்,

விவசாயத் தொழில், இந்தியாவில் உள்ளதைப்போல வேறு எங்கும் மோசமாக இல்லவே இல்லை. இங்குதான், பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இருந்ததை போன்ற எலும்பும் தோலுமாக உள்ள உழவனும், அவனது இளைத்துப்போன எருதும், மூதாதையர் தந்த கலப்பையும், முதுகை நெரிக்கும் சுமையும் உள்ளன. இந்த நாட்டில் தான் இன்றளவும், வறண்ட நிலமும், வற்றிப்போன குட்டையும், வாழ்க்கையில் இன்பமென்பது எது என அறியாது வறுமையிற் பிறந்து வளர்ந்து, வறுமையின் மடிமீது படுத்துச் சாகும் அடிமைகளும் உள்ளனர். ஏர்உழுதல், முதற்கொண்டு அறுவடை வரையில், நம் நாட்டார் மட்டுமே, பன்னெடு நாட்களுக்கு முன்பு இருந்த பழமையான முறைகளையே கையாண்டு வருகின்றனர். பழமையின் கடைசி புகலிடம் கிராமங்களே! பழமைப்பித்து முற்றிலும் கொண்டவர்களும் கிராமத்தவரே. ஒன்றரை ஏகர் நிலத்திலே ஒன்பது பாகம்! உழுது பயிரிடுவோரின் உழைப்போ, மிருக உழைப்பு! மிராசுதாரரோ, நிலத்தை உழவனிடம்தந்து, நெற்கதிரைத் தம்மிடம் கொண்டு வாழுபவர்.

மாற்றம், காலப் போக்கின் கண்ணோட்டம், நாகரீகம், கிராமங்களுக்குச் செல்வதில்லை, அன்று இருந்த அவதியே இன்று மிருக்கிறது. அதே நிலையில் கிராமங்கள் என்றென்றும் இருக்கவேண்டுமென்பதே, காந்தியாரின் கிராமப் புனருத்தாரணத் திட்டம்.

ஆம்! உள்ளபடி, மேனாடுகளில் இதே விவசாயம் நடத்தப்படும்விதத்தையம், அவர்கள் அங்கு கையாளும்முறைகளையும் கண்டவர் நம்நாட்டு விவசாயத்தையுங்காணில் இதனை “கிராமவாசியின்கர்மபலன்” என்று கூறுவரேயன்றி நாட்டின் நல்வாழ்வுச் சாதனம்என்று கூறார்.

இன்றைய விவசாய முறையால்வரும் கேடுகள்யாவை? விவசாயமுறை பெரிதும் பழைமையைவளர்த்து கிராமத்தில் காட்டுமிராண்டித்தன்மையைத் தந்து வருவது மறைமுகமானகேடு என்றபோதிலும் மற்றையகேடுகளைப் பெற்றெடுத்துவளர்க்கும் தாயகமாக விளங்குகிறது. வாழ்க்கையில் கசப்பு, மனச்சோர்வு, தன்னம்பிக்கை அற்ற தன்மையையே அதுவளர்க்கிறது. ஒருவிதமான பரபரப்பு, சுறுசுறுப்பு, வேகம், எழுச்சி, விழிப்புவருவதாகக்காணோம். கோழி கூவும்போது கூரைவீட்டில் குறட்டைவிட்டுத்தூங்கும் உழவன், எழுந்திருந்து கோணல்கலப்பையைத் தூக்கிக்கொண்டு கொடிவழிநடந்து நிலஞ்சேர்ந்து நெற்றி வியர்வை நிலம் துசிந்த மாலை இருள் வரும்வரை உழைக்கிறான், நரம்புகள் அத்தனைக்கும்வேலை. கைகால்கள் கசக்கப்படுகின்றன. மேனிகறுத்து, அவன் ஒரு தனி ஜாதியானோ என் ஐயுறுமாறுமாறிவிடுகிறான். இவ்வளவு கஷ்டப்பட்டும், பட்டபாட்டிற்குத் தக்கபலன் உண்டா? இல்லை! விளைவு முன்பு இருந்ததைவிட வளர்ந்ததா? கிடையாது. முன்பிருந்ததைவிட வேறுவிதமான, வகையான பொருள்கள் விளைகிறதோ? அஃதும் இல்லை. ஏன்? இன்னமும் உழவன் பழமையில் நெளிகிறானே தவிர, விஞ்ஞானத்தைத்துணைகொண்டுவாழ முற்படவில்லை. இன்றளவும் அவனைச்சுற்றி அந்தகாரம்இருக்கிறதேயல்லாமல், நவநாகரீகச் சுடர் காணப்படுவதில்லை.

உழைப்பு இந்நாட்டில் மட்டுமே மிக மிக அலட்சியமாகக் கருதப்பட்டு வருகிறது. உழைப்பு மட்டுமா? உயிரும் அப்படியே! ஏதோமனிதன் பிறந்தான்! மாயப் பிரபஞ்சத்தில் சின்னாள் இருப்பான், பிறகு மறு உலகு சென்று மகேஸ்வரனோடுகலந்துமலரும் மணமும் போல இருப்பான் என்று கருதப்படும் நாடு இஃதேயன்றோ! ஆகவேதான் இங்கு மனித உழைப்பு, உழைப்பிற்கேற்ற பலன்பெறாத முறையில் வகுக்கப்பட்டுள்ள உழவு முறைக்கு பலியாக்கப்பட்டு வருகிறது.

எத்தனை சேதம்! எவ்வளவு அமோகமான உழைப்பு வீணாகிறது! எத்தனை ஆயிரக்கணக்கானவர்கள் எலும்பு நொறுங்க வேலைசெய்து வாழ்க்கையை நடத்துகின்றனர். அவ்வாழ்க்கையிலும், வெறும் நடைப் பிணங்களாகவன்றோ உள்ளனர்.

உழவு பயனற்றதா? அல்ல! உழவு நம் நாட்டவருக்குப் பசிபோக பண்டந்தரவல்லதன்றோ! செல்வம் கொழித்து நம் நாட்டவர் சீருடன் வாழவும், தேயிலைத் தோட்டம் சென்று தேம்பி வாழும் தமிழர் யாவரும் தமிழகத்திலேயே தன்மதிப்போடு வாழவும் முடியும். எப்போது? உழவு வெறும் உழைப்பாக மட்டுமின்றி உழவுத்தொழிலாக, விஞ்ஞான முறையைத் துணைகொண்டு நடத்தப்படின்.

காந்தியார், காடாறுமாதம் நாடாறு மாதம் என்ற தமது போக்கின்படி, தீவிரமான கிளர்ச்சி என்னும் கட்டத்தை விட்டு நீங்கி இப்போது, மீண்டும் கிராம சேவை செய்யக் கிளம்பிவிட்டார். அதாவது தமது சீட கோடிகளைக் கிராமங்களுக்குச்சென்று சேவை செய்யச் சொல்கிறார். மந்தை மனப்போக்கினருக்கு, மேய்ச்சலுக்கு ஏற்ற இடம், அந்தச் சந்தடியற்ற சுந்தர்லோகமாகத்தான் இருக்கமுடியும் என்று சேவாகிராமத்துச் சிலர் கருதினார்போலும். “கிராம சேவையிலே ஈடுபடுங்கள், பிறகு பாருங்கள் அது தரும் வெற்றியை! வைசிராயே நம்மைத் தேடிக்கொண்டு வருவார்”என்று காந்தியார் கூறியிருக்கிறார். வைசிராயைத் தேடிக்கொண்டு இந்த வயோதிகப்பருவத்திலே அவர் ஓடவும், அவருடைய அன்பையும் ஆதரவையும் பெறக்கூடிய விதமாக ஆடவும் சித்தமாக இருந்தும், “சித்தம் இறங்கவில்லையோ காந்தி மகான் சத்தம் செவிக்கு வல்லையோ” என்று பதம்பாடிடும் சத்தம் கேட்டும், வேவல்பிரபு கதவு திறக்கக்காணோம். இந்நிலைகண்டு துக்கங்கொண்டுள்ளமக்களின் மனதுக்கு ஆறுதல் ஊட்டவே காந்தியார், வைசிராய் நம்மைத்தேடிக்கொண்டுவருவார் என்று கூறியிருக்கிறார். சரி, வைசிராய், காந்தியாரைத் தேடிக்கொண்டுதான் வருகிறார் என்றே வைத்துக் கொள்வோம், அதனால் என்ன பலன் ஏற்படும்? காந்தியாரின் பெருமை அதிக

(9ம் பக்கம் பார்க்க)

## இடமாற்றம்

"திராவிட நாடு" நிலையம் கீழ்க்குறிப்பிடும் இடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. "திராவிட நாடு" சம்பந்தமான கடிதங்கள், மணிஆர்டர்கள் எல்லாம் இனி கீழ்க்குறிப்பிடும் முகவரிக்கே அனுப்பப்படவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மானேஜர்
"திராவிட நாடு" நிலையம்
317-319, ஆடிசன்பேட்டை
காஞ்சிபுரம்.

"DRAVIDANADU" OFFICE.
317–319, Hodgsonpet,
Conjeeveram.

திராவிட நாடு.

காஞ்சி 10—12—44 ஞாயிறு

# குறைமதியல்ல!

★

சென்னை கோகலே மண்டபத்திலே அவர்கள் கூடினர் சென்றகிழமை. அவர்கள் என்றால் மக்கள் என்று தவறாகக் கருதிவிடாதீர்கள். பாமர மக்களல்லகூடினவர்கள். பாமரரைப் பராமரிக்கப்பண்பும் பக்குவமும் பயிற்சியும்கொண்ட தலைவர்கள் கூடினர்! சாமான்யர்கள் போலப் பிரசங்கம் செய்யவா கூடினர்? செச்சே! அதுதானா அவர்கள் வேலை! அதுதான் யாரும் செய்து விடுவார்களே!! அவர்கள் கூடியது அதற்கல்ல, அவர்களில் பலருக்கு அத்தகைய சாதாரணக் காரியங்களைச் செய்ய அவகாசமுமில்லை, நேரத்தின் அருமை அறிந்தவர்களல்லவா! அவர்கள் கூடியது, நிர்வகிக்க!! ஆமாம்! நிர்வாகக்கமிட்டிகூடிற்று; ஆச்சரியப்படாமற் கேளுங்கள், ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாகக் கமிட்டி கூடிற்று, ஆனால் அதிலே பெரியார் கிடையாது, தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக கமிட்டி அங்கத்தினர்களுக்கோ, பொதுமக்கட்கோ, அப்படி ஒரு கூட்டம் நடக்கும் என்பது தெரியாது. யுத்த காலத்திலே முதலமைச்சர் இன்ன இடம் போகிறார், இன்னவரைக் கண்டு பேசுவார் என்று அறிவிப்பது, எதிரிக்கு இரகசியத்தை வெளியிட்டுவிடும் செயலல்லவா! திடீரென வாஷிங்டனில் சர்ச்சில்-ரூஸ்வெல்ட்டுடன் மந்திராலோசனை—நிருபர்களுக்கு அனுமதி இல்லை—என்று செய்திகள் வெளிவரக்காண்கிறோமே அதுபோலத் தலைவர்கள் ராஜதந்திர முறைப்படி நடந்து கொண்டனர்!! ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் கோகலே மண்டபத்தில் நடைபெற்றது என்றுதான் செய்திவந்தது! அவ்வளவு தலைமறைவு ஏன் என்றுகேட்பர் மக்கள்! மக்கள்!! இவர்கள் அறியார்கள், அந்த ராஜதந்திரப்போக்குக்கு அவசியம் இருப்பதனை.

ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாகக் கமிட்டி கூடுவதானால், கட்சித்தலைவர் பெரியார், அறிக்கை விடுவார், மக்களுக்கு அறிவிப்பார், இடம் நேரம் முன் கூட்டித் தெரிவிக்கப்படும், பிறகே நடைபெறும். முகமூடிமுறையோ, திடீர்வேட்டு வித்தையோ தேவையில்லை. ஆனால் ஜஸ்டிஸ் கட்சி நிர்வாகக் கமிட்டியினர் என்று தங்களைத் தாங்களே தேர்ந்தெடுத்துக்கொண்டு, அயன் ஸ்தாபனம் அயராதுவேலைசெய்து கொண்டிருக்கும் நேரத்திலே, போலி கமிட்டி ஒரு மூலையில் கூடும்போது, எப்படி முன்கூட்டி மக்களுக்குத் தெரிவிக்க முடியும்! விசித்திரப்பிறவிகளின்போக்கு சாதாரணமாக இருக்கமுடியுமா? அது போலத்தான், ஜஸ்டிஸ் கட்சி தங்களிடமே இருப்பதாகக் கூறிக்கொள்ளும்விசித்திரப்போக்கினரின் நடவடிக்கையும், விந்தையாக இருக்கிறது. இந்த விந்தையின் முக்யஸ்தர்கள் நமது சொந்தக்காரர்கள் (இனத்தால்) ஆகவேதான், இந்தவிந்தை நமக்குத் தரும் சிந்தனையால் சீற்றம்வரவில்லை, சிரிப்பு வருகிறது!! பாபம் எவ்வளவு ஆவல் அவர்களுக்கு, எத்தனை அவசரம், ஏனோ இவ்வளவு சஞ்சலம்!

ஜஸ்டிஸ் கட்சியின் பெயரைச் சேலத்திலே மாற்றினதாலேயே, மாறுதலை விரும்பாதாருக்கு அந்தக்கட்சி சொந்தமாகிவிட்டதாம். இதுதான் அவர்களின் வாதம்! இந்த வாதம் செவிக்குக் கீதமாக சிலகனதனவான்களுக்கும், கனதனவான்களுக்குக் காகிதக் கோட்டை அமைத்துத்தரும்ஞாயிறுநோக்கிகளுக்கும் தோன்றக்கூடும். யோசித்துப்பார்ப்போர், ஏன் இவ்வளவு செல்வாக்குள்ள, சொற்றிறமும் செயல் உரமும் படைத்த சீமான்கள், ஒரு சொத்தை வாதத்தைக் கட்டியழவேண்டும், மன்றமேறி மார்தட்டி, மக்களை ஈடேற்ற இப்போது திராவிடர் கழகம் என்று புதுப்பெயருடன் விளங்கும் அமைப்பினால் முடியாது, இதோ நாங்கள் அமைக்கிறோம் ஓர் அருமையான கட்சியை, இதிலே சேரீர், பிறகு பாரீர், உமது நிலை உயர்வதை!—என்று கூறிக், கட்சி அமைத்துக் காரியத்தில் இறங்கலாமே, ஏன், ஜஸ்டிஸ் கட்சி பெரியாரிடம் இல்லை, எங்களிடந்தான் இருக்கிறது, என்ற வறட்டுவாதத்திலே ஈடுபடவேண்டும் என்றே கேட்பர்.

பெரியார் பலமுறை பொது மேடைகளிலே பலர் அறியக் கூறியிருக்கிறார், தைரியத்தோடு, தன்னம்பிக்கையோடு, தளராத உழைப்பின்மீது ஆணையிட்டு எந்தக்கட்சியின் உதவியோ கூட்டுறவோ இல்லாமலேயுங்கூட என்னால், தனியாக இயங்கமுடியும், ஏனெனில் நான்கொண்டுள்ள கொள்கைகள் மக்களுக்குத் தேவையானவை, அவைகளைக்கூறிக்கொண்டிருப்பது குரல் உள்ளவரை என்பதுவே என் கொள்கை என்று. அவருடைய ஆர்வம் அவருக்குத்தரும் ஆண்மை இருக்கிறதே அதனை, கட்சிஎம்மிடந்தான் இருக்கிறது அவரிடம் இல்லை நாங்களேகட்சிக்குக்கர்மபாத்யதைபெற்றவர்கள் அவரல்ல பெரியார்கட்சியிலே இடத்தை இழந்துவிட்டார் நாங்களல்ல, என்றுநடுக்கல்நாதத்தைக்கிளப்பும் தலைவர்கள், என்பெற்று, "இதோ எமதுகட்சி! இனி இந்தப் பெரியார் ஜஸ்டிஸ் கட்சியைத் திராவிடர்கழகமென்ற புதுப்பெயரிட்டு வைத்துக்கொண்டு எதாகிலும் செய்யட்டும், திறமையுடன் வேலை செய்ய இனி நாங்கள் திக்கெட்டும் முரசு கொட்டுவோம்" என்று ஏன் கூறவில்லை! ஏன், "தாயாதிச் சண்டைக்கே" ஜல்லடம் கட்டுகிறார்கள்?

அவர்கள் பேசியதிலிருந்து ஒரு மர்மம் வெளியாகிறது. அதாவது யாரோ, இவர்களைக் கேட்கிறார்கள், ஜஸ்டிஸ் கட்சி எங்கே? யாரிடம் இருக்கிறது? அதன் போக்கு எப்படி இருக்கிறது? நீங்கள் அதிலென்ன நிலைமையில்இருக்கிறீர்கள்? என்று. எங்கோ ஓரிடத்தில், இதுபோல உரையாடல்நடைபெற்றிருக்கவேண்டும்.

"குட்மார்னிங், சர்.........! என்ன இது சேலத்திலே, என்னமோ பட்டம் வேண்டாம், பதவிவேண்டாம் என்றெல்லாம் உங்கள்கட்சி தீர்மானம் செய்துவிட்டதாமே"

"நான்சென்ஸ்! எங்கள் கட்சியா, பட்டம் வேண்டாம் பதவி வேண்டாம் என்று கூறும். இந்தச் சுயமரியாதைக்காரர்கள் கூடிக்கொண்டு, அப்படியெல்லாம் தீர்மானம் நிறைவேற்றினர்"

"என்னசார், வேடிக்கை! எப்படி நீங்கள் அத்தகைய தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதைப் பார்த்துக்கொண்டிருந்தீர்கள்? எதிர்த்து, அத்தகைய தீர்மானங்கள் தோற்றுப்போகும்படி செய்துவிட்டிருக்கவேண்டாமா?"

"ஆமாம்......ஆனால்.........நாங்கள்"

"என்ன ஆமாம் ஆனால்! செச்செச்சே! இப்படிக் கையாலாகாதவர்கள் என்று முன்பே தெரிந்திருந்தால்........."

"அப்படி நினைக்கப்படாது! நாங்கள் முயன்றிருந்தால் முறியடித்து விட்டிருப்போம்."

"ஏன் முயற்சிக்கவில்லை?"

"நாங்கள் சேலம் மகாநாட்டுக்குப் போகவில்லை"

"பேஷ்! கட்சியிலே நீங்கள் தூண்கள், தலைவர்கள், அதிலும்மேதாவிகள்! உலகம் சுற்றியவர்கள்! நிர்வாகப் பதவிகளிலே இருந்தவர்கள்! இன்னமும் இருக்கவேண்

(6ம் பக்கம் பார்க்க)

## குறைமதியல்ல!

5-ம் பக்கத் தொடர்ச்சி.

டும் என்று எண்ணுபவர்கள். உங்களுடைய கட்சியின் மகாநாட்டிலே அதிலும் இப்போதுள்ள தலைவர் இனி இருக்கக்கூடாது என்று கூச்சலைக் கிளப்பிவிட்டபிறகு, நீங்கள் போகாதிருந்தால், என்ன சார் அர்த்தம்! இல்லை, நான்கேட்கிறேன், நீங்களே கூறுங்கள் இதற்கு என்னதான் பொருள்?''

"போகாததன் காரணம் இருக்கிறது. சேலத்திலே நடைபெற்றது ஜஸ்டிஸ் மகாநாடு அல்ல, அது திராவிடர் கழகமென்று சுயமரியாதைக்காரர்கள் ஒரு புதுகட்சியை அமைப்பதற்காசக்கூட்டிய மகாநாடு. அதிலே எங்களுக்கு என்ன வேலை''

"இது வக்கீல்வேலை சார், வக்கீல் வேலைசெய்கிறீர், கட்சித்தலைவர்கள்பேச்சல்லஇது. திராவிடர் கழகமென்று பெயரை அந்த மகாநாட்டிலே மாற்றிய பிறகு, அது திராவிடர் கழகமாயிற்று, அதுகூடும்போது ஜஸ்டிஸ்கட்சி மாநாடுதான், குழந்தையும் சொல்லும், உங்களுக்கும் அதுபுரியும்படியாகத்தான், பத்திரிகைகளிலே ஜஸ்டிஸ்கட்சி மாநாடு நடைபெறுகிறது என்றுவிடாமல் விளம்பரமும்வந்தது, அதைப்பிரதி தினமும் பார்த்துக்கொண்டிருந்தீர்கள், ஆனால் மாநாட்டுக்குப்போகவில்லை. ஏன் போகவில்லைஎன்றுகேட்டால் பச்சையாகப் புளுகுகிறீர். திட்டமாகச்சொல்லுமய்யா, பேப்பர்களிலே ஜஸ்டிஸ் மாநாடுநடக்கும் என்றுதானேபோடப்பட்டிருந்தது''

"ஆமாம்''

"உமக்குவந்த அழைப்பிலே என்ன இருந்தது? புதிதாக ஒருகட்சி உண்டாக்கப்போகிறோம்என்று எழுதியிருந்தது''

"இல்லை, ஜஸ்டிஸ்மாநாடு நடைபெறுகிறது என்றுதான்இருந்தது''

"அந்த மாநாட்டுத் தலைவர் யார்?''

"இராமசாமி நாயக்கர்''

"நாய்க்கர்! அவர் எதிரிலே பெரியார், பெரியார், என்றுபேசுவது, இங்கே நாய்க்கர் என்றுகூறுவது. ஒழியட்டும். அவர்தானே, நீங்கள் முன்பு ஜஸ்டிஸ் கட்சிக்குத்தலைவராகத் தேர்ந்தெடுத்தது?''

"ஆமாம்''

"வேறுதலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரையில் அவர்தானே நியாயப்படி தலைவர்''

"ஆமாம்''

"ஆக, ஜஸ்டிஸ்கட்சி மாநாடு ஜஸ்டிஸ் கட்சித்தலைவரின் தலைமையிலே நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தும், ஜஸ்டிஸ்கட்சியின் பிரமுகர்கள், அங்குபோகவில்லை''

"போகவில்லை.........''

"இழுக்காதே, போதும்.போகவில்லை. இப்போது, அங்கேநடந்தது ஜஸ்டிஸ் மாநாடுஅல்ல என்றுகூறவாய்கூசவில்லை! இல்லை நான்கேட்கிறேன், போர்நடக்கும் போது, அணிவகுப்பிலே காணப்படாத சோல்ஜர், பந்திவரிசை அமைக்கப்பட்டதும், இடத்தில் அமராதலிருந்தாளி, படுக்கையறையிலே, பாவைகாத்திருக்க, தெருத்திண்ணையிலே உறங்கும் கணவன், இவர்கள் போற்றப்படுவார்களா? நான் சொல்கிறேன்கேளும், செயலிலே நீங்கள் சுத்தச்சூன்யம்.''

"நடந்தது நடந்துவிட்டது. இனி நடக்கவேண்டியதுதானே நாங்கள் கவனிக்கிறோம். அதற்காகத்தான் சேலத்திலே ஜஸ்டிஸ்மாநாடு நடைபெறவில்லை என்றுகூறுகிறோம், அப்படி நடத்தியிருப்பினும், கட்சியின்பெயரை மாற்றியது, முறைப்படி சட்டதிட்டப்படிநடந்ததல்லவாகையால், கட்சித்தலைவரும் அந்தத்தீர்மானத்தை ஆதரித்தவர்களும், கட்சியின் அங்கத்தினர் பதவிகளை இழந்துவிட்டார்கள் என்று அறிக்கைவிட்டிருக்கிறோம்''

"அதாவது, தலைவரையும் ஜனங்களையும்தள்ளிவிட்டீர்கள், கட்சியைக்கைப் பற்றுகிறீர்களாக்கம்''

"தலைவரையும் அவருக்குத் தலையாட்டும் சிலரையுந்தான் 'தள்ளிவிட்டோம், ஜனங்கள் இருக்கிறார்கள்!''

"எங்கேஇருக்கிறார்கள்? சேலத்திலே, மகாநாட்டிலே, அவர்கள் கட்சியின் பெயரைமாற்றியபோதுஇருந்த பல்லாயிரக்கணக்கானமக்களும், உமது வாதத்தின்படி, தலைவரைப்போலவே, கட்சி அங்கத்தினர்பதவியை இழந்துவிட்டவர்கள்தானே! அவ்வளவுபேரும் போய்விடுகிறார்கள், நீங்கள் இருக்கிறீர்கள் கட்சியும் கையுமாக, இதைக்கண்டுநான்களிக்கவேண்டும். அதுதானே உமதுபேச்சின் பொருள்''

"அப்படிஇல்லை! ஜனங்களை நாங்கள் சேர்த்துக்கொள்வோம், இனிமேல்''

"எதைச்சொல்லி? இந்தத்திராவிடர் கழகம், பட்டம்வேண்டாம் பதவிவேண்டாம் என்று சொல்கிறார்கள், ஆகையினால் பாட்டாளிமக்களே! பாமரரே! பொது மக்களே! பார்ப்பனரல்லாத பெருங்குடிமக்களே! பட்டத்தையும் பதவியையும்வெறுக்கும் பாவிகளுடன்சேராதீர்கள், எம்முடன்சேருங்கள், என்று சொல்லிஆள் சேர்ப்பீர்கள்போலும்''

"அப்படியாபேசுவோம்! எங்களுக்கென்ன பிரசாரமுறையாதெரியாது? திராவிடர்கழகத்தார், மதமில்லை சாமியில்லைஎன்றுசொல்லுகிறார்கள், ஆகவே அவர்களோடு சேராதீர்என்று பிரசாரத்தைக்கிளப்பிரும்பல் கும்பலாக ஆள் பிடிக்கமாட்டோமா?''

"பிணத்தைப்படகாகக்கொண்டுவெள்ளத்திலிருந்து தப்பமுயன்றவன் கதை போலிருக்கிறது. கிடக்கட்டும், உங்களுக்குக்கட்சி எது?''

"ஜஸ்டிஸ்கட்சிதான்! அதன்பெயரை மாற்றினார்கள் ஆகவே அதனை அவர்கள் இழந்துவிட்டார்கள் என்று சொன்னேனே''

"வக்கீல்வாதம்! அதைத்தான் நம்புகிறீர். சரி செய்துபாரும்அதையும் . ஒன்று சொல்லிவிடுகிறேன், ஜஸ்டிஸ்கட்சியைத் தீவிரமானதாக்கிவிட்டார்கள் அவர்கள், ஆகவே இனி அதன்பெயரைக்கூறி, பரிசு பெறமுடியாது.''

"ஜஸ்டிஸ்கட்சி அவர்களிடம் இல்லை எங்களிடந்தான் இருக்கிறது என்று நாங்கள் அறிக்கைகள் விட்டு, பிரிட்டிஷ் சர்க்கார், கட்சி இப்படித் தீவிரமானதாகி விட்டதே என்று திகில் கொண்டிருப்பதைப் போக்கும் திருப்பணியைத் திருப்தி ஏற்படும்வரை செய்கிறோம், தங்கள் ஆதரவுமட்டும்.........''

"அதற்கென்ன ஆகட்டும்! எவ்வளவு சத்தற்றதாக உங்கள் வாதம் இருந்தாலும், நாங்கள் உங்களைத்தானே ஆதரித்துத்தீரவேண்டும். உங்களைவிட்டால், வேறு ஆட்கள் யார் எங்களுக்கு! ஜஸ்டிஸ்கட்சியும் சர்க்காரோடு ஒத்துழைக்கப்போவதில்லை என்று உலகு தெரிந்துகொண்டால், அப்படியானால். பிரிட்டிஷ் சர்க்காருக்கு ஆதரவுதரும் கட்சி எதுவுமே இல்லையே, என்று கூறிவிடுவர். அந்தச்சொல்லை இச்செவி ஏற்குமா? அதற்காகவேதான், நீங்கள் ஜஸ்டிஸ்கட்சி என்று சொல்லிக்கொள்வதை அனுமதிக்கிறேன், அதன் மூலம், ஜஸ்டிஸ் கட்சி சர்க்காருக்கு ஒத்துழைத்தே வருகிறது, அதிலிருந்து விலக்கப்பட்ட சிலர் காங்கிரசைப் பின்பற்றி, தீவிரப் போக்கைக் கைக்கொண்டு விட்டனர். ஆனால் அவர்கள் சாமான்யமானவர்கள். சர்களும் திவான்பகதூர்களும், நிர்வாகப்பதவிகளிலே இருந்தவர்கள் இருப்பவர்கள் இருக்கும் இலட்சணம் கொண்டவர்கள் இன்னமும், ஜஸ்டிஸ் கட்சியை நடத்துகிறார்கள் ராஜபக்தியுடன் என்று உலகுக்குச் சொல்லிக்கொள்ள எங்களுக்கும் உங்களை ஆதரிப்பதைத்தவிற வேறே வழி என்ன இருக்கிறது. ஆகையினால் என் ஆதரவு இருக்கிறது''

"அதுபோதும், அதுபோதும்''

"அதுபோதும் என்று கூறி ஆனந்தப்பட்டால் போதாது. வேலை செய்ய வேண்டும்.''

(7-ம் பக்கம் பார்க்க)

## குறைமதியல்ல!

6-ம் பக்கத் தொடர்ச்சி.

அந்தவேலைகளிலேஒன்றுதான், கோகலேமண்டபத்திலே கூடிய நிர்வாகக் கமிட்டிக்கூட்டம். சிரமப்பட்டு, செய்திச் சித்திரம் தீட்டச் சீமான்கள் சிலர், பலர் அறிந்துகொள்ள முடியாதபடி பக்குவமாகப் பாதுகாப்புத் தேடிக்கொண்டு நடத்தியவெற்றிகரமான, கூட்டம்! வெட்கம்! வெட்கம்!! என்று கூற உங்கள் மனம் தூண்டும், அவர்களுக்கு அதுபற்றிய கவலைஇல்லை. ஜஸ்டிஸ்கட்சியின் நிர்வாகக் கமிட்டிக்கூட்டம் நடைபெற்றது என்று பத்திரிகையிலே செய்திவந்ததல்லவா, அதுபோதும் அவர்களுக்கு; பார்க்கவேண்டியவர்கள் பார்த்துக்கொடுக்ககூடியதைக் கொடுப்பார்கள் குமரன் அருளும் கூடடுவித்தால் என்ற திருப்தியுடன் அவர்கள்இதுபோது, தமதுவழக்கமான அலுவல்களிலேஇறண்டறக்கலந்து விட்டிருப்பார்கள்.

கேலிக்கூத்துதான் நடந்ததே, அதிலேயாவது கொஞ்சம் கார சாரம், காட்டக்கூடாதா? அதுவும் இல்லை!

சேரவாரும் ஜகத்தீரே! என்று அன்பழைப்பு விடுத்தனராம் மக்களுக்கு; யார்? கும்பலுக்கு இடங்கொடேல்! என்ற கொள்கையைக் கொண்டிருக்கும் குணாளர்கள்!

யாரும் சேரலாம், ஜாதி, மத, குலபேதமின்றி —என்று, கொள்கையை விரிவுபடுத்தி விட்டார்கள், என்று, அவர்களின் அர்த்தமற்றசெயலின் அர்த்தம் புரிந்துகொள்ளாமல் ஆதரவுதரும் பத்திரிகைகள் எழுதியுள்ளன. விழியால்பார்க்கலாம் என்றுகூறித்தானு ஒருவன் விவேகி என்றபட்டம்பெறமுடியும், விழி இருப்பதேபார்வைக்குத்தானே! அதுபோல, இதுவரையிலேஇன்னஜாதி, இன்னமதம் இன்ன குலத்தார் மட்டுமே ஜஸ்டிஸ் கட்சியிலே சேரமுடியும் என்று ஏதாவது நிபந்தனை இருந்ததா, இப்போது இவர்கள் யாரும் சேரலாம் என்று கூற! எவ்வளவு பொருளற்ற போக்கு!!

மதத்தைஆதரிக்கவோ, கண்டிக்கவோ இவர்களின் மேடையைப் பயன்படுத்த மாட்டார்களாம். இது கோகலே மண்டபத்தில் பேசப்பட்ட பொன்மொழியாம்! திராவிடர் கழகம், மதத்தைக்கண்டிக்கும் மேடை, அதிலே சேராதீர், நாங்கள் நடுநிலைமையாளர்கள், எம்முடன் சேரும் என்று கூறுகிறார்கள். இது அவர்கள் நினைப்பு. திராவிடர் கழகம், மத எதிர்ப்புஸ்தாபன மல்ல! ஆனால் அது நிச்சயமாக ஆரிய மார்க்கத்தைத் திராவிட வாழ்க்கையிலிருந்து நீக்கித்தீரவேண்டும் என்ற கொள்கை கொண்டதுதான்! அதிலே மறை திரை இல்லை! அதைக் கூறிக்கொள்ள நாம்வெட்கப்படவுமில்லை அஞ்சவும் மாட்டோம். இஸ்லாத்தையோ, கிருஸ்தவ மார்க்கத்தையோ இயற்கைவழி பாட்டையோ, திராவிடர் கழகம் எதிர்க்கவில்லை, எதிர்க்கவேண்டும் என்று சொன்னதுமில்லை, அறிவுக்குக்கேடும் திராவிட இனத்துக்கு அழிவும் தேடும், ஆரியமார்க்கத்தை மட்டும், திராவிடர் கழகம், திராவிட நாட்டிலே அரசோச்சவிடப்போவதில்லை. இதுதான் உண்மை. இதைத் திரித்து, திராவிடர் கழகம், மதவைரிகள் கூட்டம் என்று மருட்சியூட்டவோ, பிளவு உண்டாக்கவோ, அவர்கள் பேசுவது, சின்னாட்கள்நடக்கக்கூடும், ஆனால் அதனால் விளையக்கூடியது என்ன? நம்மைப்பற்றிச் சிலர் சந்தேகிப்பர்! எதுவரை? நமது கொள்கை என்ன என்பதைத் தெரிந்துகொள்ளும் வரையில். தெளிவுபெற்றதும், நமது கழகம், அன்புநெறியை, அருவமான ஆண்டவ வழிபாட்டை, அறிவூட்டும் மார்க்கத்தைப் பழிப்பதுமல்ல ஒழிக்கக்கிளம்பியதுமல்ல ஆனால் பல தெய்வவழிபாடு, அர்த்தமற்ற ஆரியச் சடங்கு, அவைகளால் விளையும் அவதிகள் ஆகியவற்றை ஒழித்து, திராவிடர்களை, விடுதலையும் விவேகமும் பெற்ற வீரர்களாக்கப் பணிபுரியும், அமைப்பு என்பதை உணருவர். அந்தத் தெளிவுபெறத்தகுதியே அற்றவர்கள்சிலர் இருக்கக்கூடும்! தெளிவுக்கு இலாயக்கற்றவர்களின் ஆதரவைத்தேடுவது வீணர் செயல், நாம் வீணரல்ல, விடுதலை இயக்கப்பணியாளர்கள்.

இவை தெரியாமலா, கோகலேமண்டபத்திலே பிரமுகர்கள்கூடி, பொருளற்றன பேசினர் என்று பலர் கேட்பர். நாம், அங்கு கூடினவர்கள் குறைமதியினர் என்று கூறவில்லை. ஏன்! அவர்களிலே ஒரு சிலர், நாம் பயிற்சிபெற்ற பகுத்தறிவுப் பாடசாலையின் பேராசிரியர்களாக இருந்தவர்கள்! ஆகவே குறைமதியல்ல அவர்களின் கோணற்போக்குக்குக்காரணம். அவர்கள்நிலை, ஆம்! மக்களை, இனத்தை, அவர்கள் கைவிட்டுவிடுகிறார்கள், மக்களின்பணியே மகத்தானது என்ற தத்துவத்தை அவர்கள் நமக்குப் போதித்தார்கள். ஆனால் என்னென்பது அவர்தம் நிலையை, அந்தத்தத்துவத்தை அவர்கள் மறந்துவிட்டார்கள். அந்தமறதிக்குக்காரணம் இருக்கிறது.

உலகே பயந்தது அவனுடைய வீரதீரத்தைக்கண்டு, ரோமாபுரியின் மூலைமுடுக்குகளிலும் அந்த ரணகளச்சூரனின் வெற்றிபற்றியே பேச்சு! கீர்த்தியை அவன் தனது கட்கத்துக்குக்குவலயம் தரும் காணிக்கையாகப் பெற்றான்! ஆனால்.........!

அவள் தோற்றாள் போரிலே! ஆனால் சேல்விழியாள், மன்னர்களையே தனது மாளிகைக்குச் சிலைகளாக அமைத்துக் கொள்ளக்கூடிய, ஆணை அடிமை கொள்ளும் அபூர்வமான வித்தைக்காரி! அவள் சிரித்தாள், அந்த வீரனின் உறுதி சிதறிவிட்டது. வலைவீசும் வனிதையின்முன் அலை வீசும் கடலையோ, எதிர்ப்பையும் பொருட்படுத்தாத மாவீரன், பணிந்தான். களத்திலே வெற்றிபெற்றவனைக் காரிகை கட்டிலறையிலே கைதியாக்கினாள். தூரத்தவந்தான்; தொழ ஆரம்பித்தான்! சீறினான், பிறகு சிந்து பாடினான் அவளுடைய முகம் சந்திரபிம்பம் என்று! மோகம், அவனை, முடியுடை வேந்தர் பலரைப் பிடிசாம்பலாக்கும் வீரனை, வெற்றியன்றி வேறு அறியாத்தீரனை, வேக வேகமாக இழுத்துச் சென்றது போகப்படுகுழிக்கு! முதலையிடம் சிக்கிய யானையானான், முடி தரிக்கவேண்டிய அவன் சிரம் அவள் காலடியிலே கிடந்தது. அவளை வெல்ல வந்தான், வெற்றி அவளுக்குக் கிடைத்தது. எகிப்துநாட்டு எழிலுடை அரசி, கிளியோபாட்ரா, தன் சாகசத்தால், ரோம்நாட்டுமாவீரன், அண்டனி என்பவனை அடிமைகொண்ட வரலாற்றை, மையலூட்டி அவனை மண்டியிடவைத்தநிகழ்ச்சியை நாம் குறிப்பிட்டோம், மேலே. பதவிக்கு உருவமில்லை, ஆனால் அது ஊட்டிடும் பாசம், பலகிளியோபாட்ராக்களின் சாகசங்களை ஒன்று கூட்டினால் உண்டாகக்கூடிய சக்திக்குச்சமம்! இல்லையானால், நமது ஆசிரியர்கள் நமக்குக் கற்றுக்கொடுத்த பாடத்தையே மறந்துவிட முடியுமா? அந்த மறதிதான் அவர்களின்போக்குக்குக் காரணமே தவிர, குறைமதி அல்லகாரணம்! நமதுமொழி, அவர்களுக்கு ஏற்பட்டுள்ள மறதி எனும் நோயை நீக்கும் மருந்து என்றநன்னோக்கத்தால் கூறப்படுவது. மாறாக நாம் அவர்களை நிந்திக்கிறோம் என்று நினைப்பார்களானால், நாம் சோகிப்பதன்றி வேறென்ன செய்தல் முடியும். மறதி மறைக, நோய் குறைக!!—என்று அவர்கள் மனம் மாறும்வரை கூறிக்கொண்டிருப்போம்!!

---

## கவர்னர் தரிசனம்.

ஜஸ்டிஸ் கட்சியைத்தாங்கள் கெட்டியாகப்பிடித்துக் கொண்டிருப்பதாக வீம்புபேசும் கூட்டத்திற்குத்தற்காலிகத் தலைவராக இருக்கும், தோழர் இராமச்சந்திராரெட்டியார் அவர்கள் கடந்த திங்கட்கிழமை, சென்னைகவர்னரைக்கண்டு பேசினாராம்.

---

### மறைவு.

குன்னத்தூர் பிரபலஸ்தரும், சுயமரியாதைப்பற்றுள்ளவருமானதோழர் T.K. முத்தைய நாடார் அவர்கள் 29-11-44ல் இயற்கை யெய்திய செய்தி கேட்டு நாம் மிகவும் வருந்துகிறோம்.

# ஒரு வேண்டுகோள்.

—

காஞ்சிபுரம், ஜவுளி வியாபாரிகள், மகிமைப்பணக்கணக்குப்பார்க்கவும், கமிட்டி அமைத்து வேலைத்திட்டம் தீட்டவும், சென்றமாதம், ஒருவாரத்திற்கு மேலாகக்கடைகளை மூடிவிட்டுக்கூட்டம் ஏற்பாடுசெய்தனர், இதன்பயனாகப் பணம்சேர்க்கப்பட்டுச், சங்கம் அமைக்கப்பட்டு, உருவான நற்காரியத்துக்கு மகிமைப்பணம் செலவிடப்படும் என்று பலரும் எதிர்பார்த்தனர். வேலையும் மிக மும்முரமாக நடைபெற்றது. தோழர். அ. க. தங்கவேலர், அமைப்புக்கூட்டத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கணக்குப்பார்க்கப்பட்டு, 42000 ரூபாய் தொகைநிர்ணயிக்கப்பட்டது.பிறகுஜவுளி வியாபாரிகள் சங்கத்துக்கு, (பை-லா)சட்டதிட்டங்கள்அமைக்கப்பட்டன. நிர்வாகக்கமிட்டியும் அமைக்கப்பட்டது. அதன் பிறகு, ஜவுளிக்கடை முதலாளிகளுக்கு இருப்பதுபோல, கடையில்உள்ள கூட்டுக்காரர்கள், குமாஸ்த்தாக்கள் ஆகியோருக்கும் ஓட்டுரிமைதரப்படவேண்டும் என்றவிஷயம் விவாதிக்கப்பட்டு, தீர்மானரூபமாகி, நிறைவேறின. ஆனால். இந்தத் தீர்மானம், ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ள சங்க விதிகளுக்கு முரணாக இருக்கிறது. இது குறித்துத்தலைவர் ஒருகுறிப்பும், நிகழ்ச்சிஏட்டிலே பொறித்துள்ளார். அடுத்தபடி நிர்வாகக் கூட்டம் நடைபெற்று, மகிமைப்பணம், மக்களுக்கு நன்மை தரக்கூடிய காரியத்துக்குப்பயன்படவேண்டும், என்ற நோக்கத்துடன் காரியம் நடைபெறவேண்டுமென்று ஆசைப்படுகிறோம் மகிமைப்பணம், மத்தாப்புக்கும் மகிழடித் திருவிழாவுக்கும், இடிந்த மதிலைக்கட்டவும் ஒடிந்த வாகனத்தைப் புதுப்பிக்கவுமான வீணான காரியத்துக்குச் செலவிடப்படாமல், பொதுவாக மக்களுக்கும், குறிப்பாக, ஜவுளிக்கடை சம்பந்தப்பட்ட தொழிலிலே ஈடுபட்டிருக்கும் மக்களுக்கும், நன்மைதரக்கூடிய காரியத்துக்குப் பயன்படவேண்டும். இது [illegible], கற்கண்டு அபிஷேகத்துக்கும் காமாட்சி ஊர்வலத்துக்கும் காசைக்கரியாக்க!! இது அறிவு ஆட்சிசெய்யும் காலம், இக்காலத்துக்கு ஏற்றபடி, மகிமைப் பணத்தை மக்கட்கு நலன்தரும் விதத்திலே பயன்படுத்தவேண்டும் என்பதிலே அக்கரை செலுத்தும்படி அன்பர்களைக் கேட்டுக்கொள்கிறோம். ஓட்டுக்கு வேட்டுகள் கிளப்புவதிலும் யாருக்கு நிர்வாக மெம்பர் பதவி என்பதிலே போட்டியிடுவதிலும், சத்தற்ற உரிமைக்குப் போரிடுவதிலும் காட்டும் அக்கரையிலே அரைவாசி, பணம் பக்குவமான முறையிலே செலவிடப்படவேண்டும் என்று வலியுறுத்துவதற்குக் காட்டினால், பலன் உண்டாகும்!

ஜவுளிக்கடைக்காரரின் மகிமைப்பணத்துடன், பட்டுத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள், பலசரக்கு வியாபாரிகள், ஆகிய பல அமைப்புகளும் தத்தம் மகிமைப் பணத்தையும் கூட்டினால், பல ஆயிரமல்ல, சில இலட்சம் சேரக்கூடும், அதனைக்கொண்டு, அறிவு உதயமாகவும், உதவி பெருகவும், உயரிய ஏதேனும் திட்டம் தயாரித்து நடத்தலாம். அதை விட்டு, அதிர்வெடிக்கும் அம்மானைக்கும் பணத்தைப்பாழாக்க வேண்டாமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறோம். பார்ப்போம், நமது ஊர் வியாபார விற்பனர்களின் போக்கு எப்படி இருக்கிறது என்பதை.

இப்படிக்குத்,

திராவிடர் கழகத்தார்.

—

தண்டையார்பேட்டை

திராவிடர் கழகத் திறப்பு விழா

19-ந் தேதி மாலை 6-மணிக்குத் தோழர் C. N. அண்ணாதுரை தலைமையில் மேற்படி விழா தண்டையார்பேட்டையிலுள்ள புதுச்சேரி அப்பாசாமியார் மாளிகையில் நடந்தேறியது. பெரியார், தோழர்கள் T. சண்முகம், அன்பழகன், ஜெனார்த்தனம், கார்ப்பரேஷன் கவுன்சிலர் தோழர் பார்த்தசாரதியார் ஆகியோர், சொற்பொழி வாற்றினர்.

# திருமணம்

திருப்பூர் திராவிடர் கழக செயற்குழு அங்கத்தினர் தோழர் S. சுப்பையச்செட்டியார் குமாரர் தோழர் S. சஞ்சீவிக்கும், கோயமுத்தூர் கோபால் & கோ., சொந்தக்காரர் தோழர் S. கோபால்கிருஷ்ண செட்டியார் குமாரத்தி தோழியர்ஜெயாவுக்கும் 27—11—44ல் சீர்த்திருத்தத் திருமணம் நடந்ததன்பொருட்டுத் திராவிடநாடு இதழுக்கு ரூ. 5 நன்கொடையளிக்கப்பட்டது.

பொன்னேரித் தாலூக்கா ஆதித்திராவிட இளைஞர்கழக நிர்வாக உறுப்பினர் தோழர் S. S. ஆறுமுகத்திற்கும், தோழியர் M. அன்னம்மாளுக்கும் 10-11-44ல் சென்னை நகராண்மைக்கழக உறுப்பினர் தோழர் P.M. வேலாயுதபாணி, செங்கற்பட்டு ஜில்லாபோர்ட் அங்கத்தினர் M. C. லட்சுமணப்பிள்ளை இவர்கள் ஆதரவில் ரிஜிஸ்டர் வாழ்க்கை ஒப்பந்தம் நடந்தது.

பணகுடி வாலிபர் சங்கத்தின் ஆதரவில் தெய்வநாயகம்பிள்ளைக்கும். திருமதி ஆவுடையம்மாளுக்கும் 12—11—44ல் சீர்திருத்த மறுமணம் சிறப்புடன் நடந்தது.

பூசாரிப்பட்டி நாடார் வாலிபர் சங்கத்தின் ஆதரவில்தோழர்சுப்பையநாடார் குமாரர் தோழர் ராமசாமிக்கும், தோழியர் செல்லத்தாய் அம்மையாருக்கும் 27—11—44ல் மறுமணம் சீர்திருத்த முறையில் நடந்ததை முன்னிட்டு திராவிடநாடு பத்திரிகைக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

கோவில்பட்டித் தோழர் S. S. அண்ணாமலையின் மைத்துனன் செல்வன் A. துரைச்சாமிக்கும், திரு, தங்கையநாடார் மகள் செல்வி சீனியம்மாளுக்கும், 1—12—44ல் தோழர் S K. A. பால்ராஜ் தலைமையில் சீர்த்திருத்தத் திருமணம் நடந்ததைப்பற்றித் திராவிடநாடு இதழுக்கு ரூ. 1, நன்கொடை தரப்பட்டது.

கல்லுப்பட்டி திரு. நா. க. காமாக்ஷி கவுண்டர் குமாரர் தோழர் கா. ஆண்டிவேலுக்கும், தோழியர் வீருநாகம்மைக்கும் 22—11—44ல் சீர்திருத்தத்திருமணம் நடந்ததைக்குறித்துத் திராவிட, நாடு இதழுக்கு ரூ. 1, நன்கொடை வழங்கப்பட்டது.

—

சண்முகவேலாயுதம்

ஈரோடு தோழர் சண்முகவேலாயுதம் உடல் நலிவால் ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சைப் பெற்று குணமடைந்து வருகிறார்.


# விளம்பரம்.

--(o)—

செங்கற்பட்டு ஜில்லாபோர்டு சம்பந்தமான எல்லாவித அச்சு வேலைகளுக்கு 1945, 1946 ஆகிய இரண்டாண்டுகளுக்கும் டெண்டர்கள் தேவை. டெண்டர் பாரம் மனுவின்பேரில் சைதாப்பேட்டை டிஸ்டிரிக்ட் போர்டு ஆபீசில் கிடைக்கும், டெண்டர்கள் 15-12-44க்குள் சீல்வைத்த கவரில் தங்கள் மனுவை சைதாப்பேட்டை டிஸ்டிரிக்ட் போர்டு ஆபீசுக்கு அனுப்பிவைக்க வேண்டியது. கவரில் "அச்சுவேலை டெண்டர்" என எழுதவேண்டும்.

T. சண்முகம், தலைவர்.
ஜில்லாபோர்டு, செங்கற்பட்டு.
சைதாப்பேட்டை போஸ்டு.

## கிராம சேவை

(4-ம் பக்கத் தொடர்ச்சி.)

மாக்கப்படும். காங்கிரஸ் எடுகள், பிரிட்டிஷ் ஏகாதிபத்யசிங்கத்தின் பங்கம்" என்று தலையங்கம் தீட்டக்கூடும், "மண் குடிசைக்குள் மாளிகை" என்றுஹாஸ்ய எழுத்தாளர் தீட்டக்கூடும். நாமக்கல்லார் ஒரு அறுசீரடியும் தேசிகவிநாயகனார் ஒருதிருத்தாண்டகமும், சுத்தானந்த பாரதியார் ஒரு சோபனப்பாட்டும் பாடக்கூடும், ஆம்! இவ்வளவு நடந்தாலும், இதனால் நாட்டுக்கு என்ன பலன்? மேனாட்டிலிருந்து வந்திருந்த பல பிரமுகர்கள், அந்த மண் குடிசைக்குள்ளே, மகாத்மாவை பேட்டிகண்டு பேசியகாட்சியைப்படமாக்கியும், கண்டபாடம் என்ன? அந்த மேனாட்டு மேதைகள் இருபதாம் நூற்றாண்டிலே ஓலைச்சுருணையையும் கருப்பட்டியையும், முடிச்சுள்ள நூலையும் முரட்டுக்கதரையும் நம்பிக்கொண்டிருக்கும் இந்த விசித்திரவீரன் யார்என்று வியப்போடு பார்க்கவருகிறார்கள் என்பதோடு, பார்த்தவுடன், இந்திய விடுதலையின் சின்னம் எனப்படும் தலைவரின் கோலமே இப்படி இருக்கும்போது மக்களின் மனப்போக்கு எப்படி இருக்கும் என்பதைப்பற்றி யோசிக்கவும் வேண்டுமோ என்று எண்ணியபடி. மேனாடு திரும்புகின்றனர். காந்தியார் எதிர்பார்க்கிறபடி, வைசிராய் பிரபுவே சேவா கிராமத்துக்கு வருகிறார் என்று வைத்துக் கொள்வோம், வந்தால் என்ன?. இந்தியா இன்னமும் இருண்டுகிடக்கிறது, இளித்தவாயரின் இடமாக இருக்கிறது, பிடித்த பிடியிலே அடங்கிக்கிடக்கும் என்று தீர்மானித்து விட்டுப்போவார், வேறென்ன நடக்கும்! கிராமம் ஈடேற இதனால் ஏதாவது வழி உண்டாகுமா? கிராமவாசியின் கவலை தீருமா? அவனுடைய கஷ்டம் மறையுமா? அவன் வயிறார உண்டு, உடலார உடுத்தி நோயின்றி வாழவழி கிடைக்குமா?இதற்குத்திட்டம்காந்தியாரிடம்இருக்கிறதா? இது சம்மந்தமாகக்காந்தியாருக்குக் கொள்கை என்ன இருக்கிறது?

"காந்தியாருக்குக் கிராமத்தின் மீது தான் கனிவு, அவர் கிராமவாசி! உருவைப்பார். உணர்ச்சியைப்பார். உரையைக்கேள்! அவரைவிட கிராமவாசிக்கு உற்ற நண்பர் வேறு கிடையாதே. அவர் யந்திரத்தின் கொடுமையிலிருந்து தொழிற்சாலைகளின் துக்கச்சுழலிலிருந்து நவநாகரிகம் எனும் நச்சுப்பொய்கையிலிருந்து கிராமவாசிகளை மீட்கும் பணியிலேயன்றோ தமது வாழ்நாளைச் செலவிடுகிறார். அவரிடம், கிராமம் வாழத்திட்டம் இருக்கிறதா என்று கேட்கிறாயே, என்ன அறியாமையடாஉனக்கு"—என்று தேசபக்தியை அதிகப்படுத்திக் கொண்டுதெளிவைக்குறைத்துக்கொண்டுள்ள தோழர்கள் கூறுவர்.

கிராம சேவை, ஏழைகளிடம் அன்பு காட்டுவதுபோல, ஒரு இலட்சியமாகக் கருதப்பட்டு, அதற்குப்பலர் பலவிதமான பொருள் கொண்டுள்ளனர். என் நண்பர் ஒருவருடன் சாப்பாட்டு விடுதியிலே அமர்ந்தேன் உணவுக்கு, உண்டி முடிந்தது, மோரும் சோறும் கலந்துண்டு கொண்டிருந்த என் நண்பர், கூட்டு கொஞ்சம்போடு என்றார், பொரியலையும் கொண்டுவா, என்று கூறினார்,பிறகு சோறும் போடென்றார், நான் பிரம்மித்துப்போனேன், மங்களம் பாடிடமுதலடி துவக்கியவர் மீண்டும் கீர்த்தனம்பாட ஆரம்பிக்கிறாரே இதென்ன என்று. சோற்றுக்கடைக்காரர், சொன்ன வண்ணம் செய்தார். என் நண்பர், இலையிலே இடப்பட்ட எதையும் தொடவில்லை, அப்படியே இலையை மடித்து விட்டார், உள்ளே அத்தனை பண்டமும் கிடந்தது, நாங்கள் எழுந்துவிட்டோம், "நண்பா! ஏன் இதுபோலச் செய்தாய்? வீணாக அவ்வளவு பண்டத்தைவைத்திடச்சொன்னாய், பிறகு உண்ணாமல் இலையிலேவிட்டு விட்டாயே,பாழாகாதோ வீணாகாதோ?' என்றுநான் கேட்டேன்.

"பாழுமாகாது வீணுமல்ல! நாமோ ஆறணா தருகிறோம் சாப்பாட்டுக்கு,நான் கணுவுக்கும் நாம்உண்பதில்லை, சோற்றுக் கடைக்காரனுக்குத்தான் மிச்சம். ஏன் அவனுக்கு அது போவது என்றுதான் இந்தச் சூட்சமம் கண்டுபிடித்தேன். நாம் சாப்பிடமுடியாவிட்டாலும் ஆறணா அளவுக்கு அவன், இலையிலே பண்டம் போட வேண்டும்" என்றார் என் நண்பர்.

"பெரிய வேடிக்கையாகஇருக்கிறது உமதுசித்தாந்தம்" என்றுகூறிவிட்டுநான் சிரித்தேன், அவர் என் முதுகைத்தட்டிக்கொடுத்துவிட்டு, "சித்தாந்தமும் இதிலேஇருக்கிறது. ஏழைமக்கள் எச்சில் இலைக்குக்காத்திருக்கிறார்கள் வெளியே. சோற்றுக்கடைக்காரனின் காலடிச்சத்தத்தைக்கேட்க ஆவலாக அவர்கள்காத்திருப்பது, பூங்காவனத்திலே பூங்கொடியாளுக்காகக் காத்துக்கொண்டிருக்கும் காதலன், சதங்கை சத்தத்தைக்கேட்க எவ்வளவு ஆவலாகஇருப்பானோ அப்படிப் பட்டது. சதங்கைசத்தம்கேட்டுக்காதலன், 'வந்துவிட்டாள் நமது சல்லாபி' என்று மகிழ்ந்திருக்கும்நேரத்திலே முதியவள் ஒருவள் கையிலோர் முறமும் கூட்டுக்கோலும்கொண்டு,உதிர்சருகுகூட்டிட வந்தால், காதலன்மனம் எப்படிஇருக்கும்! அதுபோல, எச்சில் இலைகளைவீசிடவருபவனின் காலடிச்சத்தம்கேட்டதும், பசியுடன் இதுவரைபோராடினோம், இனி பல்லைக்காட்டிடும் நாய்களிடம் கொஞ்சம்போர்இருக்கிறது, அதை எளிதிலே முடித்துக்கொண்டால், பிறகு வயிற்றுக்குக்கிடைக்கும்என்றுஎண்ணிடுவான் ஆவலாக. வீசப்பட்டஇலைகளை விரித்துப் பார்க்கும்போது, அவைகள் பூசிமெழுகப்பட்ட இடம்போலஇருக்கக்கண்டால் அவன் மனம் என்னபாடுபடும்! எவ்வளவு கலங்குவான்! அவனுக்கு மனமகிழ்ச்சி தருவதற்கு நான் கையாளும்முறையே சிறந்தது. நான் வீசும் இலையைஅவன் விரித்தால் அவன்ஆனந்தக்கூத்தாடுவான், அதிலே அவனுக்குச் சோறும் கறியும் சொகுசாகக்கிடைக்கும். ஏழைகளைக்காப்பாற்றவழிஎச்சில்இலையிலே அதிகம் மிச்சம்வை!!—என்பதுதான் இந்தச் சம்பவத்திலே பதிந்துள்ளசித்தாந்தம்" என்றுகூறினார்.

இது என் நண்பர்செய்தவேடிக்கை என்றுமட்டும்கொள்வதற்கில்லை. ஒருசமயம் அவர் இதனை வேடிக்கைக்குக்கூறியிருந்திருக்கலாம். ஆனால் ஏழைகளுக்கு இதம்செய்யும்வழிகளிலே, இதுபோன்ற முறைகளையும்காண்பவர்கள் உண்டு. விழாநாட்களிலே ஏழைகளுக்குச் சோறிடுவதும், வீட்டுவாசலிலே அவன்நின்று வினயமாகத்தன்பசியை அறிவிக்க உண்டகளைப்பால் உடல்துவளும் உருவங்கள் அவர்களுக்கு ஒருபிடிதருவதும் நாம்காணும்காட்சிகள்.இவைஏழைகளைக் காப்பாற்றும்வழிகள் என்றகருத்துடனேயே நடத்தப்படுகின்றன. ஆனால், ஏழைகளின்கூட்டம் இதனால் வாட்டத்தைஒட்டிவிட்டதுமில்லை, அந்தக்கூட்டத்தின் தொகை குறைந்ததுமில்லை, அன்னதானசமாஜ ஆண்டுவிழாக்களிலே அன்பர்கள் அன்புரையாற்றும் உலகிலே, அரைவயிற்றுக்கஞ்சிக்கு அலைபவர்களின் தொகைகுறையவில்லை, வளர்ந்துவருகிறது. எனவே, ஏழ்மையை நீக்கிவிடுவது தவிர ஏழைகளின் குறையைத்தீர்க்க வேறு வழிகள்பயன்படா. அதுபோலத்தான் கிராமசேவையும். கிராமங்களிலே உள்ள சீர்கேடுகளைச் சிறுகச்சிறுகப் போக்குவதற்குச் சீர்திருத்ததிட்டங்கள் வகுத்துக்கொண்டு சிலர் சிரித்தமுகத்துடன்காட்சிஅளிப்பர். கிராமத்தின்தேவைகள்என்ன? 1. நல்லபாதை 2. குடிநீர் வசதி 3.ஆரம்பபாடசாலை, 4வாசகசாலை என்று, எண்ணிக்கையோடு ஒரு கிராம சேவாஊழியர்கூறுவார்அவர்பேசிமுடித்ததும் அவாருகே அமர்ந்திருந்த ஆமதாபாத்சேலையும் ஆளைமயக்கும் சொல்லையும்கொண்ட ஆரணங்கு எழுந்திருந்து, முக்கியமான விஷயத்தை என்சிநேகிதர்மறந்துவிட்டார், ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒவ்வொரு நர்ஸ்தேவை, என்று கூறுவார், உடனேதலைவர், மன்னிக்க வேண்டும் என்று மலர்ந்தருளுவார், பிரசங்கியார் முகத்திலே அசடு வழியும் இப்படிக்கிராம சேவா பிரசங்க மாரி பொழிவர். ஆனால், இவைகள் அன்னதான சமாஜமூலம் ஏழைகளைக் காப்பாற்ற முயலுவதுபோல, ஆகாத திட்டங்களாக முடியுமே தவிர, பிரச்னையைத் தீர்க்காது. எப்படி ஏழ்மை இராதபடி திட்டம் வகுத்தாலொழிய ஏழைகளின் குறையைத் தீர்க்கமுடியாதோ

(10ம் பக்கம் பார்க்க)

## கிராம சேவை

9-ம் பக்கத் தொடர்ச்சி.

அது போல, கிராமம், நகரம் என்ற பேத நிலையைப் போக்கினாலன்றி, கிராமத்திலே காணப்படும் குறைபாடுகளை நீக்க முடியாது. ஏழைகளைக்காப்பாற்றும்வழி ஏழ்மையை நீக்குவது. ஏழ்மையால் ஏற்படும் விளைவுகளிலே, ஒன்றிரண்டை நீக்க முயல்வது போதாது. காய்ச்சல்காரனின் வாய்கசப்புபோக, நாவிலே தேன் தடவினால் போதாது, காய்ச்சலைக் கஷாயம் தந்துபோக்கவேண்டும். உடலிலே நோய் இருக்கும்வரை அவன் நோயாளியாகத்தான் இருப்பான், நோயாளிக்கு வேதனைகள் இருந்துதான் தீரும். பொருளாதார அமைப்பு முறையிலே பேதம் இருக்கும் வரையிலே ஏழ்மை இருந்துதான் தீரும். ஏழ்மை இருக்கும் வரையிலே ஏழை இருந்துதீருவான், ஏழை இருக்கும் வரை, அவனுடைய குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும்,

நகரவாசிகளான நளினிகளும் நாதர்களும் ஓர் நாள் கிராமம் சென்று கிராம மக்களுக்கு உபதேசம் செய்கிறார்களே அதைப் பகுத்தறிவாளர்கள் கிராம சேவை என்று கருதமாட்டார்கள். அது அந்த நாகரீகத் தோழர்களுக்கு மனமகிழ்ச்சிக்காகச், சிக்கனமான முறையிலே அவர்களாக வகுத்துக் கொண்ட நிலாச் சோறு! கிராம சேவை என்றால் கிராமம் நகரம் என்று பேதம் காட்டி, அந்தப்பேத அமைப்பின் மூலமாக ஒய்யாரமாக வாழ ஒரு இடமும் ஓலமிட்டு வாழ மற்றோர் இடமும், ஓலமிடுபவரிடம் ஒய்யாரமாக வாழுபவர் ஓய்வாக இருக்கும் ஓர் நாள் சென்று, துக்கம் விசாரிப்பதுமாக இருக்கிறதே, அது ஒழியவேண்டும். கிராமசேவை என்று இன்றுள்ள திட்டம், வெறும் கபடம். கள்ளமறியாத உள்ளமுடையவரைக் கொள்ளையடித்து வாழும் வழி. இதனைச் சமதர்மிகளோ, பகுத்தறிவாளர்களோ, ஏற்கமாட்டார்கள். இது சுரண்டும்முறை என்று கூறுவர், அழும் குழந்தைக்குப் பாலிலே அபின் கலந்தூட்டும் முறை என்றுரைப்பர். உண்மையிலே, தேசபக்தர்கள் என்பவர்கள் இத்தகைய கிராம சீர்திருத்தம், சேவை, என்று பேசுகிறார்கள் என்றால், அது சூதாகஇருக்கவேண்டும் அல்லது ஏமாளித்தனமாக இருக்கவேண்டும். முன்னதாக இருப்பின் அவர்கள் கண்டனத்துக்கும், பின்னதாக இருப்பின் கேலிக்கும் ஆளாகவேண்டியவர்கள் ஆனால் நாடு இன்றுள்ள நிலையிலே அவர்கள், இரண்டுக்கும் சிக்காது, புகழப்படுகிறார்கள், போற்றப்படுகிறார்கள்!!

காந்தியாருக்குக்கிராமவாசிகள்போதுமென்ற மனமேபொன் செய்யும் மருந்து என்ற கொள்கையின்படி வாழ்ந்து, நாகரீகத்திலே சிக்காமல் எளிய வாழ்க்கையிலே ஈடுபட்டு இகத்திலே "இல்லாமை"யை இன்பவல்லியாக ஏற்றுக்கொண்டு இருந்துவிட்டு, பரத்திலே பரமனுடன் இருக்கவேண்டும்என்பதுதான் கொள்கை. தண்டவாளப் பெயர்ப்பும் தபாலாபீஸ் கொளுத்துவதும் நின்ற பிறகு, தூதும் சிந்தும் நடந்து அதுவும் ஓய்ந்தபிறகு, அரசியலில் மந்தமான நிலைமை ஏற்படவே, காந்தியார் இதுபோது, கிராம சேவைபற்றிப் பேசவும், ஏழு இலட்சம் கிராமங்களுக்கு இதம் தேடும் திட்டம் தீட்டவும் ஆரம்பித்திருக்கிறார். கதாசிரியர்களுக்கு எவ்வண்ணம் எந்தச்சமயத்திலேஎந்தக்கதையைஎழுதுகிறார்களோ, அந்தக் கதையிலே கற்பனை செய்யப்படும் கதா நாயகியே அந்த நேரத்திலே அழகிற்சிறந்தவளாக, "ஸ்திரீ இரத்னமாக" த்தோன்றுகிறாளோ அது போலக் காந்தியார், எந்தச் சமயத்திலே எந்தத்திட்டத்தைப் பற்றிப் பேசத் தொடங்குகிறாரோ, அந்தச்சமயத்திலே அந்தத்திட்டமேதான், விமோசனமார்க்கமாகவும், விடுதலைக்கு வழியாகவும், சுயராஜ்யத்துக்குச் சூட்சம பாதையாகவும் தோன்றுவது வழக்கம். அவர் மனமாற அவ்வண்ணம் எண்ணுகிறாரோ இல்லையோ, அவ்வண்ணம் மக்கள் நினைக்கும்படி செய்வதிலே அவர் சமர்த்து வேறு யாருக்கும் வராது. அம்முறையிலே இப்போது, தாம் கூறும் கிராம சேவைத் திட்டத்தை நிறைவேற்றினால் சுயராஜ்யம் சித்தியாகும், வைசிராய் ஓடோடி வருவார், என்று கூறுகிறார்.

கிராம சேவைபற்றி அவர் கொண்டுள்ள கருத்து, கிராமவாசியை, ஏழ்மையிலே இனிமையும், எளியவாழ்க்கையிலே இன்பத்தையும், பழமையிலே பக்குவத்தையும் காணச்செய்வதுதான்! உன் பெட்டியிலே தங்கக்காசு இருக்கக்கூடாது! உன் விழி, போக போக்கியப் பொருளின் மீது செல்லக்கூடாது—என்று கூறுகிறார் கிராமமக்களை ஈடேற்றப் போவதாகக் கூறும் புண்ணியர். இம்முறை அவர் தமது ஆஸ்ரமத்திலே "ஊழியர்களை"க் கூட்டிவைத்துச் செய்துள்ள உபதேசம், விசித்திரமானது. சிலர் கிராமங்களையே அழித்துவிட வேண்டும், எங்கும் நகரமயமாக்கப்படவேண்டும் என்று கூறுகிறார்கள் என்று கூறிவிட்டு, தனக்கு அந்தத் திட்டத்திலே நம்பிக்கை இல்லை என்றும் தெரிவித்துவிட்டார். யந்திரசாதனங்களோடு கூடிய தொழிற்சாலைகள் நகர அமைப்பு முறை. இது சிலகாலமாகத்தான் ஏற்பட்டிருக்கிறது. இதனால் சுகம் உண்டா என்பது தெரியாது. ஆனால் ஒன்றுமட்டும் தெரிகிறது, இந்த யந்திர சாதனங்களோடு கூடிய தொழிற்சாலைப்பெருக்கமே உலகப் போருக்கு காரணம் என்றுமட்டும் தெரிகிறது— என்று காந்தியார் கூறியிருக்கிறார். பணத்தைப் பாஷாணம் என்றும் சுகத்தைச் சொக்குப்பொடி என்றும் மதவாதிகூறுவதுண்டு. அதுபோல் காந்தியாருக்கு இந்த தொழில் வளர்ச்சியும் யந்திரப் பெருக்கமும், அதாவது விஞ்ஞான வளர்ச்சி விஷமாக இருக்கிறதாம். இந்த விஞ்ஞானமே உலகப்போருக்குக் காரணம் என்று பழிபோடுகிறார்.

போர் என்றால் அதனால் தொல்லையும் துயரமும், கஷ்டமும் நஷ்டமும், பொருள்சேதமும் உயிர்ச் சேதமும் நேரிடுகிறது. அது மக்களுக்குத் தெரியும் எனவே போர்என்றால் பொல்லாங்கானது என்று அவர்கள் கருதுவார்கள். இது காந்தியாருக்குத்தெரியுமாகையால், விஞ்ஞானத்தினாலேயே, போர் எனும் விபரீதம் ஏற்பட்டுவருகிறது என்றுகூறிவிட்டால், பாமரர்கள் விஞ்ஞானத்தையே விபரீதமாகக் கருதி வெறுப்பார்கள், என்ற தந்திரத்தை மந்திரக் கோலாகக்கொண்டு மக்கள் முன் ஆட்டுகிறார்.

காந்தியாரின் வாதத்திலே விஷமம் இருக்குமளவு விவேகம் இல்லை என்பது மட்டரகங்களுக்குக் கூடத்தெரியக்கூடியதே. போருக்குக் காரணம் விஞ்ஞானம் செறிந்துள்ள இக்கால யந்திரசாதனமானால், போர், விஞ்ஞான காலத்திற்கு முன்னால் இருந்திருக்க முடியுமா? அப்படிப்போர் நடைபெறாமலே இருந்ததா! மதச்சண்டைகளால் மண்டைகள்உடைந்ததே, விஞ்ஞானமா, இதற்கு வித்து? காந்தியார் போற்றிடும் இராமன் நடத்திய சண்டை, காவியகாலத்துச்சண்டையாயிற்றே, விஞ்ஞானம் என்ற பதமே தெரியாதே அதுபோது! வேதாந்திகளும் ராஜரிஷிகளும், முனீஸ்வரர்களும்மூலத்தை உணர்ந்தவர்களும் இருந்த அந்த நாட்களிலே நடந்ததாகக் கூறப்படும் பயங்கரமான சண்டைகள், விஞ்ஞானத்தின் விளைவுகளா? மாடு, மனை, மங்கை, மதம், எனும் காரணங்களுக்காக. மகத்தான சண்டைகள், மண்டலங்கள் அழியக்கூடிய சண்டைகள் நடந்துள்ளனவே, அவைகள் விஞ்ஞானத்தால் விளைந்தனவா? எந்த விவேகியாவது இவருடைய வாதத்தை மதிப்பானா?

---

## கேட்டீரா, விஷயத்தை!

3-ம் பக்கத் தொடர்ச்சி

உதவாக் கரை வேலையாகவே முடிந்தது. வரி கொடா இயக்கம் வாயளவில் நின்றுவிட்டது யுத்த எதிர்ப்புக்கூச்சலிட்டனர்! ஆனால் இலட்சக்கணக்கானத் திராவிடர்கள் யுத்தமுன்னணி வேலையில் ஈடுபட்டு வெற்றிக்கொடி நாட்டி வருகிறார்கள். வெள்ளையனே வெளியேபோ என்ற பேச்சு பயனற்றுப்போச்சு!

ஆகவே, பலமுறை பல விதத்தில் தோற்றுப்போன காந்தியார் இப்போது ஓய்வு பெறவேண்டியது அவசியமே. இதை நாம் ஏற்கனவே எடுத்துக்காட்டியிருக்கிறோம் அரசியலில் அவர் இனி கலந்துகொள்ளக் கூடாதென்பதை.

# வைதீகக் கும்பலுக்குக் குமரன் கசையடி!

இந்து சட்டத்திலே சில சீர்திருத்தங்கள்செய்யும் முயற்சியைஇந்து வைதீகக் கும்பல் எதிர்க்கிறது. இந்த "பிரகிருதிகளின்" இரைச்சலை இலட்சியம் செய்ய வேண்டாம், என்று காரைக்குடிக் "குமரன்" சர்க்காருக்கு அறிவுறுத்துகிறது.

வைதீகச்சொரூபங்களைக் 'குமரன்' அழகாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறது. அந்தக் கும்பலுக்குச் சுயபுத்தியும் கிடையாது, சொல் புத்தியும்புரியாது, என்று 'குமரன்' கூறுகிறது. 30-11-44ல் 'குமரன்' **எதைத்தான் எதிர்க்கவில்லை** என்ற தலைப்பிலே தீட்டியுள்ள தலையங்கத்தை இங்கே வெளியிட்டிருக்கிறோம்.

ஏதாவது சீர்திருத்தம் என்றபேச்சுக் காதில் விழுந்தால் சிலர் எதிர்க்கிறதென்பிருப்பது இந்த நாட்டின் சாபம் போலும். ஹிந்து லா என்ற ஒன்று இருக்கிறது. அதைப் படித்தாலும் பாவம் என்று துணிந்து கூறலாம். மனுதர்ம சாஸ்திரம் என்ற ஒன்றின் அழுகல் மணம் பிரதிபலிப்பதே இந்த ஹிந்து லா என்ற குப்பையாகும். அதிலிருந்து எதையும் தெளிவுபடுத்த முடியாது. தெளிவுபட ஏதாவது முடியுமானால் உலக வாழ்வுக்கு முழுக்கேடாக இருக்கும். ஹிந்து லா என்றால் ஹிந்துக்கள் முழுமைக்கும் ஒரே சட்டமாக இருக்கவேண்டாமா? ஆயிரம் ஜாதிக்கும் ஐம்பதினாயிரம் வழக்கங்கள், அவைகட்கும் இந்த லாவுக்கும் எவ்வித சம்பந்தமுமிராது. அந்த வழக்கமெல்லாம் செல்லுபடியாகும். விதவைக்குச் சுவீகாரம் செய்யலாமா கூடாதா என்று கேட்டால் எந்தப் புத்தியுள்ளவனும் கணவனுக்குப் பின் மனைவிக்குத்தான் சர்வ பாத்தியமுமிருப்பதால் சுவீகாரம் செல்லத்தான் வேண்டுமென்பான். ஆனால் சட்டத்தில் விதவைக்குச் சுவீகாரம் செய்துகொள்ளப் பாத்யமில்லை; அவள் ஜீவனாம்சம் வாங்கித் தின்றுவிட்டுச் சாக வேண்டுமென்று கூறும் இதே சட்டப் புத்தகத்தைக் காட்டி வக்கீல் கதறுவார். ஆனால் அந்த ஜாதி வழக்கப்படி விதவைக்குச் சுவீகாரம் செய்யப்பட்ட பல நிகழ்ச்சிகள் உண்டென்று நிரூபித்துவிட்டால் இந்தச்சட்டம் பின்வாங்கி நிற்கும். மாகாணத்துக்கு மாகாணம் சட்டம் வேறு விதமாய் இருக்கிறது. இப்படி எத்தனையோ உண்டு. கல்யாண விஷயத்தில் ஆயிரம் பிழைகளுண்டு. வாழ்க்கையில் எத்தனையோ மாதிரியான துயரங்கட்கு அடிப்படையாக இந்தச் சட்டம் இருந்து வருகிறதென்று கூப்பாடு சென்ற பல ஆண்டுகளாக ஏற்பட்டு வருகிறது; இருந்தாலும் அரசாங்கத்தாரின் அலட்சியங் காரணமாகவே திருத்தம் செய்வது தாமதப்பட்டிருக்கிறதென்று கூறினால் அது மிகையன்று.

ஏதாவது இருப்பதைத் திருத்துவதென்றால் வைதிகர் என்று சிலர் கூட்டம் போட்டுக் கூச்சல் கிளப்புவது வழக்கம். அப்படியே இந்த நகல் மசோதாவைப்பற்றியும் அங்கங்கே இரண்டொருவர் மண்டபங்களில் நின்று ஏப்பமிட்டுக் கொண்டிருக்கின்றனர். சிதம்பரத்தில் நாலாறு தீக்ஷிதர்கள் "ஓ ஓ இது மகா ஆபத்தென்று" கூறிக் கொண்டனர். மூலைக்கொரு சத்தம். சட்டத்தைப் படித்து எதில், கட்டளைக்கு ஆபத்தென்று கண்டு பிடித்துச் சொன்னால் நன்றாக இருக்கும்.

மாஜி ஹைக்கோர்ட் நீதிபதி திரு, வி. வி. சீனிவாசய்யங்காரவர்கள் திருச்சியில் பேசிய பேச்சில், நகல் மசோதாவைப்பற்றி அவசியமென்று நான் பேசியிருக்கிறார்கள். ஆனால் வைதிகர்கள் எதிர்ப்புக்குச் சிறிது விட்டுக்கொடுக்க வேண்டுமென்றும் பரிதாபமாகக் கூறியிருக்கிறார்கள். உண்மையிலேயே வைதீகர் சிலர் பரிதாபப் படக்கூடியதுதான். சொந்தத்திலும் யோசித்துப் பார்க்குந் திறமை கிடையாது. யாரும் திறமையாளர் சொன்னாலும் கேட்கிறதில்லை. இந்த ஆத்மாக்களைக் கண்டு பரிதாபப் பட வேண்டியதுதான். பால்ய விவாகம் செய்யாவிட்டால் இந்து மதம் ஒழிந்து போய்விடுமே என்று கதறினார்கள். கூட்டம் போட்டார்கள். இல்லாத கூத்தெல்லாம் நடத்தினார்கள். 14-க்கு முந்திச் செய்யாதே என்று சட்டம் வந்ததும், சமஸ்தானங்கட்கு ஓடி மணம் செய்தனர். சட்டத்தைமீறி ஒழிக்கிறேன் என்றனர். வரவர இன்னும் பெண் ருதுவாகவில்லை யென்றும் வயது வரவில்லையென்றும் வெளியே கூறிக்கொண்டிருந்தனர். அவ்வளவுதான். நாளாக நாளாகச் சரியாகி விட்டதல்லவா?

அரசாங்கத்தாரோ சட்டசபை அங்கத்தவரோ இந்த அற்ப ஜனத்தொகையின் விளங்காத கூப்பாட்டை அணுவளவும் லட்சியம் செய்யக்கூடாது.. சட்டத்தைச் செய்து அமுலுக்குக்கொண்டுவரத் தயங்க வேண்டியதில்லை. சமுகத்திலுள்ள அழுகல் நாற்றத்தைப் போக்க யோசித்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை.

சென்னை மாதர் சங்கத்தார் இம்மசோதாவின் பொதுவான செய்கையை ஆதரித்து மேலும் பல சிபார்சுகளைச் செய்திருக்கிறார்கள். அவைகளைப் படித்துப் பார்த்தால் அந்தச் சங்கம் எவ்வளவு நிதானமாகக் கவனித்து அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறதென்பது விளங்கும். பொறுப்பற்றதும் விரட்டவிரட்ட நின்று பிடிக்க முடியாத உளுத்த கொள்கைகளை உதறிவிட்டு ஓட்டம் பிடிக்கும் வைதிக கூட்டத்தைப் பற்றி யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. உண்மையிலேயே விஷயம் விளங்கவில்லை. விளங்கிக் கொள்ள இஷ்டமுமில்லை. சொன்னால் விளங்கிக் கொள்ளச் சக்தியுமில்லை. ஒரு சிலருக்கு விளங்கினாலும் ஏற்றுக்கொள்ள வழி கிடைப்பதில்லை.இவர்களை என்னசெய்ய முடியும்?

---

## நடிக உலகின் நஷ்டம்.

பிரபல நாடக, சினிமா, நடிகை தோழியர் கோல்டன் சாரதாம்பாள் அவர்கள் தனது 50-வயதில் 22-11-44ம் தேதியன்று, ஏற்கெனவே நோய்வாய்ப்பட்டிருந்து மரண மடைந்தனர் எனும் சேதிகேட்டு துக்கித்தோம். நடிப்பின் உயிர் நாடி அறிந்து நடிக்கும் ஒரு சீரிய நடிகை என்று நாடக ரசிகர்கள் கூறிமகிழக்கேட்டுள்ளோம். சினிமாவிலே அன்னாரது சீரிய இயற்கை நடிப்பைக் கண்டிருக்கிறோம். சகுந்தலையின் தாயாக, வந்திருக்கிறார், தாய்க்குவேண்டிய தன்மை பொறுமை அன்பு அமைதி தெளிவு முதலிய குணங்களுடன் சேர்த்தியாக நடித்திருக்கிறார், மேலும் பல படங்களில் உரிய வேடங்களில் தோன்றி நடிகக் கலைக்கு பெருமையளித்து வந்த தோழியர் சாரதாம்பாளின் பிரிவு நடிக உலகிற்கு பெரு நஷ்டம், இவரது பிரிவால் வருந்தும் துணைவர் தோழர் சென்னை, P. கோவிந்தசாமிநாயுடு அவர்கட்கும், மருமகன் N. S. பாலகிருஷ்ணன் அவர்கட்கும், எமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

---

தந்தி:—"புறமார்க்" திருச்சி.



## பெரியபுராண ஆராய்ச்சி.

3-ம் பக்கத் தொடர்ச்சி.

கும் நிலையில் தமிழ்மொழியில் பாடப்பட்டுத் தமிழ்நாட்டுச் சைவர்களால் கையாளப்பட்டு வருகின்றன வென்பதே தெரியாது. என்றாலும் அந்நாடுகளிலுள்ளவர்களிற் சிலர் இன்னுஞ் சைவசமயிகளாகவே இருக்கின்றனர். அவர்களுக்கு இத்தேவார திருவாசகங்கள் ஒரு தினைத்தனையும் உதவி செய்வதில்லை. இத்தமிழ்நாட்டிலுங்கூட இத்தேவார திருவாசகங்களை ஒப்புக்கொள்ளாத சைவப்பார்ப்பனர் பலர் இருக்கின்றனர். இவர்கள் இப்பாடல்களையெல்லாம் பண்டாரப்பாடல்களென்றுஒதுக்கித் தள்ளிவிட்டனர். இந்த நிலையில், இத்தமிழ்நாட்டிலுள்ள சில சைவத்தமிழரும், யாழ்ப்பாணத்திற் சிலருந்தான், இத்தேவார திருவாசகங்களைத் தங்கள்சமய உண்மையை விளக்கும் நூல்கள் என்று பிதற்றித்திரிகின்றனர். ஐயகோ! இவர்கள் அறிவு இருந்தவாறு மிக நன்று, நன்று! (தொடரும்)

---

## திக்கெட்டும் திராவிட முரசு.

### மருதமுத்தூர்.

ஷையூர் ஆதித்திராவிட வாலிபர் சங்கத்தின் ஆதரவில் 22-11-44ல் ஒரு கூட்டம் கூடி திருநெல்வேலி சிவ அக்னீஸ்வரன், கொழும்பு செல்லும் இசக்கிமுத்து இவர்களைப் பாராட்டியதுடன் ஆரியத் திராவிடப் போராட்டத்தைப் பற்றியும் விளக்கமாகப் பேசினர்கள்.

### நாகூர்.

24-11-44ல் ஷையூர் சுயமரியாதை இளைஞர் சங்க நிர்வாகக் கூட்டங்கூடி சேலம் மாநாட்டுத் தீர்மானங்களை ஆதரிப்பதாயும் ஷை சங்கத்தைத் திராவிடர் கழகமென மாற்றுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

### சோழபுரம்.

12-11-44ல் ஷையூர் தோழர் S. S. கண்ணுச்சாமி தலைமையில் திராவிடர் கழகம் நிறுவப்பட்டுக் கழகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் பல அங்கத்தினர்களும் சேர்க்கப்பட்டனர்.

### மகாதேவபுரம்.

12-11-44ல் ஷையூர் தோழர் P, பெரியண்ணன் தலைமையில் திராவிடர் கழகம் நிறுவப்பட்டுக் கழக அமைப்பாளர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு பல உறுப்பினர்களையும் சேர்க்கப்பட்டது.

### முள்ளக்குடி.

9-11-44ல் ஷையூரில் திருச்சி ஜில்லா லேபர் அட்வைசரி மெம்பர் டாக்டர் B. T. ராஜன் அவர்கள் தலைமையில் திராவிடர் கழகம் நிறுவப்பட்டுக் கழக அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டதுடன் பல அங்கத்தினர்களும் சேர்க்கப்பட்டனர்.

### விருத்தாசலம்.

12-11-44ல் ஷையூர் தோழர் S. முனிசாமி தலைமையில் கடலூர் தோழர் திராவிட மணியால் திராவிடர்கழகம் திறந்து வைக்கப்பட்டதுடன் கழக செயற்குழு ஒன்றும் நிறுவப்பட்டது.

### ஆரணி.

15-11-44ல் இவ்வூர் தோழர் K. ஜம்புலிங்கம் தலைமையில் பல தோழர்கள் திராவிட இளைஞர் கடமை என்பது பற்றிப் பேசினர்.

### திருவண்ணாமலை.

15-11-44ல் இவ்வூர் ஜவுளிவியாபாரி பாலகிருஷ்ண முதலியார் அவர்கள் தலைமையில் திராவிடர் கழக அமைப்புக்கூட்டம் கூடிப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### சிங்கநல்லூர்.

17-11-44ல் ஷையூர் ஆதித்திராவிட வாலிபர் சங்கத்தின் ஆதரவில் ஒரு கூட்டங் கூடி புதிய கழகஅமைப்பாளர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் பலதோழர்கள் ஆதித்திராவிடர்கள் கடமை, முன்னேற்றம் என்பது பற்றிப் பேசினர்.

### பம்பாய்.

19-11-44ல் இந்நகர் கோவில்பட்டித் தாலுக்கா ஆதித்திராவிட மகாசன சங்க ஆரம்பவிழாதோழர் கா. ஐ. பாலகிருட்டினன் அவர்கள் தலைமையில் இனிது நடந்தது. பல தோழர்கள் பலகருத்துக்களைப் பேசிய பின் கழக நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

26-11-44ல் இந்நகர் தென்னிந்திய ஆதித்திராவிட வாலிபர் கழக நிர்வாக சபைக்கூட்டம் தோழர் வி. எஸ். டி. ராஜா அவர்கள் தலைமையில் கூடிப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### சுவாமிமலை.

26-11-44ல் பகல் இவ்வூர் இளைஞர் இலவச வாசக சாலையின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா தோழர் K. K. நீலமேகம் அவர்கள் தலைமையில் பெரியார் ஈ. வே. ரா. அவர்கள், தோழர் நெடுஞ்செழியன் முதலியவர்கள் வாசக சாலையின் அவசியத்தைப்பற்றிப் பேசினர். அன்றுமாலை தேரடிக் கெதிரில் நடந்த பொதுக்கூட்டத்தில் பல தோழர்களும் பெரியார் ஈ. வே. ரா. அவர்களும் நீண்ட நேரம் உணர்ச்சி ததும்பச் சொற்பொழி வாற்றினர்.

### புதுப்பேட்டை

ஷையூர் திராவிட கழகத்தினர் சார்பில் 14—11—44ல் தமிழ் ஆசிரியர் தலைமையில் நடந்த கூட்டத்தில் சென்னை ந. சிவரத்தினம், கடலூர், ஆ. திராவிட மணி, ஆகியோர் பேசினர்.

### ராசீபுரம்

ஷை ஊர் பகுத்தறிவு வாசகசாலையின் ஆதரவில் 13—11—44ல் R. K. அரங்கசாமி தலைமையில் ஒரு கூட்டம் கூடிச் சங்கநிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுப் பலதீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

### உறையூர்

11—11—44ல் திருச்சி டவுன்ஹால் மண்டபத்தில்தோழர் T.P. வேதாச்சலம் அவர்கள் தலைமையில் ஷை ஊர் திராவிட இளைஞர் கழகம் திறக்கப்பட்டுக் கழகக்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் ஷை விழாவில் தோழர் k.S. பெரியசாமிப்புலவர், தோழர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பிரன்ஸிபால் (கரந்தைக்கல்லூரி) தோழர் ஜெனார்த்தனம் முதலியோர் அரிய சொற்பொழி வாற்றினர்.

### சைதாப்பேட்டை

12—11—44ல் ஷையூர் திராவிட இளைஞர் கழக உறுப்பினர்கள் கூடி தங்களுக்குள் ஒரு மனதாகக் கழகநிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்துக்கொண்டனர்.

### காஞ்சிக்கோவில்

10—11—44ல் ஷையூரில் திராவிடர் கழகம் நிறுவப்பட்டுக்கழக நிர்வாகிகளையும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

### கரந்தை

18—11—44ல் ஷையூர் க. சு. மணியம் அவர்கள் தலைமையில் திராவிட வாலிபர் கழகம், தோழர் க. திருமாறனால் தோற்றுவிக்கப்பட்டு செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### விழுப்புரம்

22—11—44ல் கீழ்ப்பெரும்பாக்கத்தில் திராவிடர் கழகம் நிறுவப்பட்டுக் கழகக்குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### துறையூர்

15—11—44ல் ஆசிரியர் P.N. கிருஷ்ணசாமி தலைமையில் பல ஆசிரியர்களும் மாணவர்களும் திராவிட மாணவர் கழகம் என்பதைப்பற்றிப்பேசிக் கழகக் குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### பொன்னேரி

பொன்னேரி தாலூக்கா ஆதித்திராவிட இளைஞர் கழகத்தின் நிர்வாகஉறுப்பினரும், திருவொற்றியூர் ஆதித்திராவிடப் பொதுநல சங்கத்தலைவருமான தோழர் P. S. மணி அவர்கள் செங்கற்பட்டுஜில்லா போர்ட் மெம்பராக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

### சிந்தாதிரிப்பேட்டை

26—11—44ல்சென்னைச்சிந்தாதிரிப் பேட்டையில் ஆதித்திராவிடர் இளைஞர் கழகம் திறக்கப்பட்டு செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### ராயபுரம்

30—11—44ல் சென்னை ராயபுரம் 2-வது டிவிஷனில் டாக்டர் இருதயநாதன் அவர்கள் தலைமையில் திராவிடர் கழகம் நிறுவப்பட்டுக் கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்,

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
317—319 Hodgsonpet Conjeeveram.